15.05.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உயர்கிறது! மாவட்டத்தில் தொடர் மழையால் நிலத்தடி நீர்மட்டம்... சுருளி, கும்பக்கரை அருவிகளில் வெள்ளப்பெருக்கு

ஆண்டிபட்டி: தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால் ஓடைகளில் நீர்வரத்து ஏற்பட்டது. ஒரே நாளில் பெரும்பாலான கண்மாய்கள் பாதி அளவு நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கும்பக்கரை, சுருளி அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது. மேற்கு தொடர்ச்சி மலை வேலப்பர் கோயில் மலைப்பகுதியில் பெய்த மழையால் நாகலாறு ஓடையில் நீர் வரத்து ஏற்பட்டது. இதனால் மரிக்குண்டு பொம்மையசாமி நாயக்கர் கண்மாய், கோடாங்கி நாயக்கர் கண்மாய், பிச்சம்பட்டி கண்மாய், தெப்பம்பட்டி கண்மாய், ஜம்புலிபுத்தூர் கண்மாய், ரெங்கசமுத்திரம் கண்மாய்களுக்கு நீர் வரத்து இருந்தது.

பெரும்பாலான கண்மாய்கள் ஒரே நாளில் பாதி அளவு நிரம்பியது. பல ஆண்டுகளாக நீர் வரத்து இல்லாமல் கண்மாய்கள் வறண்டு கிடந்தன. இதனால் ஆண்டிபட்டி பகுதியில் நிலத்தடி நீர் மட்டத்தில் சரிவு ஏற்பட்டது. கிணறுகள், ஆழ்குழாய்கள் பலவும் வறண்டதால் இறவை பாசனமும் பாதிப்படைந்தது. இந்நிலையில் தற்போது பல கண்மாய்களில் நீர் தேங்கி உள்ளது. இதனால் ஆண்டிபட்டி பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் சமன் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் உயரும் வாய்ப்பு உள்ளதால் அடுத்தடுத்த சாகுபடியில் நல்ல பலன் கிடைக்கும்

என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ஆண்டிபட்டி நகரில் முறையான வடிகால் வசதி அமைக்கப்படாததால் ரோடுகளில் மழை நீர் ஆறாக ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் வீட்டிற்குள் புகுந்தது.

வருஷநாடு: மேகமலை,ஹவேயிஸ் மலைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையினால் சின்னச்சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேக மலை, ஹவேவிஸ் மலைப்பகுதியில் 100 க்கும் மேற்பட்ட சிற்றோடைகள் இணைந்து சின்னச்சுருளி அருவியாக உருவெடுத்துள்ளது. ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர். வழக்கமாக கோடை காலத்தில் வறண்டு கிடக்கும் சின்னச்சுருளி அருவியில் தற்போது பெய்த கனமழையால் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. சின்னச்சுருளி அருவியில் நீர் வரத்து அதிகரித்துள்ளதனை தொடர்ந்து சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது.கும்பக்கரையில் குளிக்க தடை : பெரியகுளம்: பெரியகுளத்திலிருந்து ஏழு கி.மீ., தொலைவில் உள்ளது கும்பக்கரை அருவி. கொடைக்கானல் வனக்கோட்டம், பெரியகுளம் வனப்பகுதியின் கட்டுப்பாட்டில் உள்ளது. கும்பக்கரை அருவியில் ஆண்டு தோறும் செப்டம்பர் முதல் ஜனவரி வரை அருவியில் தண்ணீர் கொட்டும். சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்வர்.

தற்போது கொடைக்கானல் மலைப்பகுதியில் தொடர் மழை காரணமாக கும்பக்கரை அருவி பகுதியில் நீர் வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு வனத்துறை தடை விதித்துள்ளது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு தற்போது கோடை மழையால் கும்பக்கரை அருவியில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. குளிக்க தடை விதிக்கப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்

மழை அளவு (மி.மீ)

ஆண்டிபட்டி - 60.0

அரண்மனைப்புதூர் - 10.6

போடி - 40.2

கூடலூர் - 35.0

மஞ்சளாறு - 8.0

பெரியகுளம் - 6

பெரியாறு - 9.2

சோத்துப்பாறை - 17

தேக்கடி - 4.4

உத்தமபாளையம் - 46

வைகை அணை - 43

வீரபாண்டி - 18

**கோடை உழவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரை**

வாலாஜாபாத்: அதிக மகசூலை பெருக்கும், கோடை உழவினை மேற்கொள்ள வேண்டும் என, வேளாண் உழவர் பயிற்சி நிலைய அதிகாரி கூறினார். இதுகுறித்து, வேளாண் துறை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் கூறியதாவது: விவசாய சாகுபடி பரப்பில், 30 சதவீதம் மட்டுமே கோடை பயிர் செய்யப்படுகிறது. தண்ணீர் பற்றாக் குறையால், எஞ்சியுள்ள, 70 சதவீதம் நிலங்களில் சாகுபடி செய்வதை விவசாயிகள் தவிர்த்து விடுவர்.

அவ்வாறு தவிர்க்கும் விவசாயிகள், கோடை மழையின் ஈரத்தில், கோடை உழவினை (புழுதி) மேற்கொள்ளலாம். அவ்வாறு உழவு செய்வதன் மூலம், கடினமான கட்டிகள் உடைந்து, மண் லேசாகி விடும்; கோடை மழைநீர், நிலத்தில் தேங்கினால் மண்ணின் ஈரத்தன்மை அதிகரிக்கும்; சத்து நிறைந்த மண் அரிப்பு தடுக்கப்படுகிறது; நிலத்தில் களை செடிகள் மக்கி எருவாகி விடும்.

மேலும், நிலத்தில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள், சூரிய வெப்பத்தால் அழிக்கப்படுவதோடு, அவை பறவைகளுக்கும் இரையாகின்றன. கோடையில் உழவு செய்த நிலங்களில் பயிரிடப் படும் பயிர்களின் வேர் வளர்ச்சி, அதிக சுவாசம் பெற்று, மகசூல் பெருகும் வாய்ப்பு உள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

## கோடை மழையால் வெம்மை தணிந்தது

காஞ்சிபுரம்: காஞ்சிபுரத்தில் நேற்று பெய்த கோடை மழையால் வெப்பம் தணிந்து, பகுதிவாசிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

லட்சத்தீவு அருகே காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்பு இருப்பதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை நீடிக்கும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இந்நிலையில் நேற்று, தமிழக வட மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. மாமல்லபுரம், செங்கல்பட்டு, உத்திரமேரூர், மதுராந்தகம் ஆகிய பகுதிகளில் மிதமான மழை பெய்தது. காஞ்சிபுரத்தில், நேற்று காலை முதல், பிற்பகல் வரை, விட்டுவிட்டு கனமழை பெய்தது. கோடை மழையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள், நேற்று காலைமழை பெய்ததால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். காஞ்சிபுரம் நகர சாலைகளில் வெள்ளம் போல் ஓடிய மழைநீரால், வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். இருந்த போதும், காஞ்சிபுரம் மாவட்டத்தை வாட்டி வதைத்த வெயில் சற்று தணிந்ததாக, பகுதிவாசிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## அவலூர்பேட்டை பகுதியில் மழை

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியம், அவலூர்பேட்டையில் நேற்று காலை 6:00 மணி முதல் 9:00 மணி வரையில் மிதமான மழை பொழிந்தது.

முன்னதாக கடந்த இரண்டு தினங்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று திடிரென மழை பெய்ததால் வெப்பம் தணிந்தது. இதே போல் சுற்றுப்பகுதியில் ஓரளவிற்கு மழை பெய்தது. இதனால் கிராமப்புற மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## ஏற்காட்டில் 37.4 மி.மீ., மழைப்பதிவு

சேலம்: சேலம் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக, பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், மதியம் 12 மணிக்கு துவங்கிய மழை, இரவு, 7 மணி வரை தொடர்ந்து நீடித்தது. மழையால், சாலைகள் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளித்தது. குண்டும், குழியுமான சாலைகளில், வாகனங்கள் செல்ல முடியாமல் தடுமாறின. பல தெருக்கள், சேறும், சகதியுமாக மாறியது. ஏற்காட்டில், அதிகப்படியான பனிமூட்டம் இருந்தபோதும், மழை விடாமல் பெய்தது. இதனால், சுற்றுலா பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர். அதிகபட்சமாக, நேற்று முன்தினம், ஏற்காட்டில், 37.4 மி.மீ., மழைப்பதிவானது. தாலுகா வாரியாக மழைப்பொழிவு விபரம் (மி.மீ.,): சேலம் - 25, ஏற்காடு - 37.4, வாழப்பாடி - 17, ஆத்தூர் - 22.6, தம்மம்பட்டி - 18.8, கெங்கவல்லி - 5.4, இடைப்பாடி - 27, ஓமலூர் - 18.3, மேட்டூர், 32.8.

## ரூ.8.20 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,650,

குறைந்தபட்சமாக, 4,126 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,272, குறைந்த பட்சமாக, 3,826 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 8.20 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## 2,500 டன் மக்காச்சோளம் நாமக்கல் வருகை

நாமக்கல்: நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு, ஆந்திர மாநிலத்தில் இருந்து, 2,500 டன் மக்காச்சோளம் வந்ததை, லாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, அரிசி, கோதுமை, மக்காச்சோளம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தீவன பொருட்கள், சரக்கு ரயில் பெட்டிகள் மூலமாக ஏற்றிவந்து, நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி வைக்கப்படுகிறது.

அவை, சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் குடோன்களுக்கு, லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, அரவை நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில், நேற்று, ஆந்திரா மாநிலத்தில், சரக்கு ரயில் மூலம், 41 பெட்டிகளில், 2,500 டன் மக்காச்சோளம், நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்ததது.அவை லாரிகள் மூலம், சம்பந்தப்பட்ட குடோனுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு இருப்பு வைக்கப்பட்டது.

## தர்மபுரியில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தொடர்ந்து இரண்டாவது நாளாக மழை பெய்து வருவதால், மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், மே மாத தொடக்கத்தில் இருந்து கடும் வெப்பம் வீசி வந்தது. இதனால், பொதுமக்கள் பகல் நேரத்தில் அவதிக்குள்ளாகி வந்தனர். தர்மபுரி சுற்றுவட்டார பகுதியில் அதிக பரப்பில், ஆண்டு முழுவதும் மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இவ்வாறு சாகுபடி செய்யப்படும் மரவள்ளிக்கிழங்கு செடிகள், மழை இல்லாத போது அதை காப்பாற்றுவதற்காக விவசாயிகள் அருகில் உள்ள நீர் நிலைகளில் இருந்து தண்ணீரை குடங்களில் தலையில் சுமந்து வந்து ஊற்றுகின்றனர்.

மழை காலத்தில், பெய்யும் மழையை கொண்டு, மரவள்ளிக்கிழங்கை வளர்த்து அதை பிடுங்கி விற்பனை செய்து வருகின்றனர். இதன்படி இந்த ஆண்டும் தர்மபுரி சுற்றுவட்டார பகுதியில் அதிக பரப்பில் மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். கடந்த மூன்று நாட்களாக, தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் கோடை வெப்பம் தணிந்து பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக தர்மபுரி கலெக்டர் அலுவலகம் பகுதியில், 289 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தர்மபுரி நகரில், 17 மி.மீ. பாப்பிரெட்டிப்பட்டி, 16.40, பென்னகாரம், 9, ஒகேனக்கல், 6.20, மாரண்டஹள்ளி, 6, பாலக்கோடு, 4.20 மி.மீட்டர் மழை பதிவானது. மழையால், நிலங்களில் ஈரப்பதம் அதிகரித்துள்ளதால், குறைந்தது, 15 நாட்களுக்கு மரவள்ளிகிழங்கு செடிகளுக்கு தண்ணீர் ஊற்றாமல் இருக்க முடியும் என்பதால் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அக்னியை குளிர்வித்த அடைமழை 6 மணி நேரம்! மக்கள் மனதில் மகிழ்ச்சி வெள்ளம்

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சுற்று வட்டாரத்தில், நேற்று முன்தினம் இரவு தொடர்ந்து ஆறு மணி நேரம், அடைமழை கொட்டித்தீர்த்தது. கோடையில் பெய்யும் மழையால் நிலத்தடி நீர் மட்டம் மேம்படும் என்பதால்,பொதுமக்களும்,விவசாயிகளும்மகிழ்ச்சியடைந்துள்ளனர்.அக்னி நட்சத்திர காலத்தில் கடும் கோடை வெயில் சுட்டெரிக்கும்; ஏதாவது ஓரிரு நாட்கள் மழையும் பெய்யும். ஆனால், இந்தாண்டு அக்னி நட்சத்திரம் தொடங்கியது முதலே, இடை விடாமல் மழை கொட்டித்தீர்க்கிறது. பொள்ளாச்சி பகுதியில் ஒருவாரமாகவே பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.வெயில் காலத்தில் பருவம் தப்பி பெய்யும் மழைக்கு, 'வங்கக்கடலில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியே காரணம்' என நிபுணர்கள் இதற்கு காரணம் கூறுகின்றனர். பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், பகலில் வெயில் அல்லது மந்தமாக காணப்படும் வானிலை, மாலை 6:00 மணிக்கு மேல் மழைப்பொழிவுக்குதயாராகி விடுகிறது.மெதுவாக துவங்கும் மழை, இரவு 7:00 மணிக்கு மேல் தீவிரமடைந்து, மணிக்கணக்கில் பெய்கிறது. நேற்று முன்தினம் (13ம் தேதி) மாலை 6:30 மணிக்கு துவங்கிய பலத்த மழை, தொடர்ந்து பெய்தது. மழையின் தீவிரம் குறையாமல், இரவு 12:30 மணிக்கு மேலும் நீடித்தது.இதனால் பணிகளுக்கு சென்றவர்கள் வீடு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது. இரு சக்கர வாகன ஓட்டிகள், தங்கள் வாகனத்தை இயக்க முடியாத நிலையும் உருவானது. தற்போது பள்ளி மாணவர்களுக்கு கோடை விடுமுறை காலம் என்பதால், அவர்களுக்கு பாதிப்பில்லை.இந்த மழை மேலும் சில நாட்கள் தொடர வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சோலையாறு அணையில் அதிக மழை

வால்பாறையில் தொடரும் மழையால், சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை, 21.95 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு, 237 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை, 15.35 அடியாக உயர்ந்தது.அணைக்கு வினாடிக்கு, 74 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருகிறது. அணையிலிருந்து வினாடிக்கு, 55 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.வால்பாறையில் நேற்று காலை, 8:00 மணி வரை பதிவான மழை விவரம் மில்லி மீட்டரில் வருமாறு: வால்பாறை-34, மேல்நீராறு-12, கீழ்நீராறு-13, பரம்பிக்குளம்-11. அதிகபட்சமாக சோலையாறு அணைப்பகுதியில், 6 செ.மீ.,மழை பெய்துள்ளது.

## ஆழியாறு அணை நீர் மட்டம் உயர்வு

தொடர் மழை காரணமாக ஆழியாறு அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி மொத்தம் உள்ள, 120 அடியில், 111.20 அடியாக இருந்தது. வினாடிக்கு, 187 கன அடி நீர் வரத்து இருந்தது. வினாடிக்கு, 109 கன அடிநீர் வெளியேற்றப்பட்டது.நேற்று காலை, 8:00 மணியுடன் முடிந்த, 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (மி.மீ.,): ஆழியாறு-27.2, திருமூர்த்தி- 17, அமராவதி- 13, பொள்ளாச்சி-63.8, வேட்டைக்காரன்புதூர்-45, மணக் கடவு-133.6, நல்லூர்-18, நவமலை-6, சர்க்கார்பதி-2, தூணக்கடவு-3, பெருவாரிப்பள்ளம்-4, உப்பாறு- 17, காடம்பாறை-10, அப்பர் ஆழியாறு-11, பொங்கலூர்-35, சுல்தான்பேட்டை-17, காங்கேயம்-8, பல்லடம்-42.

**உரம் கொடுக்க மறக்காதீங்க! : தென்னை வளர்ச்சி வாரியம் அறிவுரை**

பொள்ளாச்சி: தற்போது பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி, தென்னை மரங்களுக்கு உரமளிக்க மத்திய தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.பொள்ளாச்சி பகுதியில் தற்போது கோடை மழை ஆரம்பித்து பெய்து வருகிறது. வழக்கமாக ஜூன் மாதம் துவங்கும் மழை, இந்தாண்டு முன்னதாகவே ஆரம்பித்துள்ள நிலையில், அதை தென்னை மரங்களுக்கு உரமளிக்க விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம் என தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் அறிவுறுத்தியுள்ளனர்.உரப்பரிந்துரை: மழையின் போது உரம் அளித்தால், பாசனம் செய்யும் வேலை குறையும் என்பதுடன், மரங்களும் நன்கு குறும்பை பிடிக்கும். ஒரு தென்னைக்கு, ஆண்டுக்கு, 50 கிலோ மக்கிய தொழு உரம், யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் இரண்டு கிலோ, பொட்டாஷ் இரண்டு கிலோ என பேரூட்ட சத்துக்கள் வழங்க வேண்டும்.பேரூட்டமளித்த, 30 நாட்களுக்கு பிறகு, போரக்ஸ், 50 கிராம், மக்னீசியம் சல்பேட், 500 கிராம் அளிக்க வேண்டும். அழுகல் அல்லது வாடல் நோய் காணப்படும் மரங்களுக்கு மட்டும், டிரைகோ டெர்மா விரிடி நுண்ணுயிரியை, மரத்துக்கு, 50 கிராம் எனும் விகிதத்தில், தொழு உரம் அல்லது இயற்கை உரங்களுடன் கலந்து இட வேண்டும். ரசாயன உரங்களுடன் கலந்தால், நுண்ணுயிரிகள் இறந்து விடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்சொன்ன உரங்களை, ஆண்டுக்கு இரு முறையாக பிரித்து அளிப்பது நன்கு பலனளிக்கும். ஆறு மாதத்துக்கு ஒரு முறை, தென்னையை சுற்றிலும் அறை வட்ட பாத்தி எடுத்து, அதில் உரத்தை இட்டு மூட வேண்டும். அடுத்த ஆறு மாதத்தில், இன்னொரு பகுதியில் அரை வட்ட பாத்தி அமைத்து, உரமிட வேண்டும். தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி, பரிந்துரைப்படி உரமளித்தால், தென்னையின் காய்க்கும் திறன் கூடி, உற்பத்தி

அதிகரிப்பதுடன், நோய் எதிர்ப்பு திறனும் அதிகரிக்கும் என தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கோழிகளுக்கான வெள்ளை கழிச்சல் நோய் சனிக்கிழமைகளில் தடுப்பூசி போட அழைப்பு

ஈரோடு : கோடையில், கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளை கழிச்சல் நோய்க்கு, அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சனிக்கிழமை தோறும், இலவசமாக தடுப்பூசி போடுவதாக, ஈரோடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் யசோதை தெரிவித்தார். இது குறித்து பேராசிரியர் யசோதை கூறியதாவது: கோடையில், கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் எனும் ராணிக்கெட் நோய் தாக்கும். இந்நோய், பண்ணையில் உள்ள ஒரு கோழியை தாக்கினால், மற்ற அனைத்து கோழிகளுக்கும், வெள்ளைக்கழிச்சல் நோய் எளிதாக பரவும். கோழியை நோய் தாக்கினால், இறப்பது உறுதி. அதற்கு மருந்துகள் கிடையாது.கோழிகளுக்கு கொடுக்கப்படும் தீவனம், தண்ணீர், காற்று, கழிவு, வெளி பண்ணைகளில் இருந்து வரும் கோழி வாகனம் ஆகியவை மூலம், இந்நோய் பரவி தாக்கும். தாக்கிய கோழிகள் சுருண்டு படுத்திருக்கும். எளிதில் ஓட இயலாது. தீவனத்தை எடுத்துக் கொள்வதில் சிரமப்படும்.மூக்கில் மஞ்சள் போன்ற திரவம் ஒழுக ஆரம்பிக்கும். கோழி கழிவு தண்ணீர் போன்ற ஒழுகலுடன் கழியும். பொதுவாக பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு, தடுப்பூசி எடுத்துக் கொள்வதால் சிறந்தது.

விவசாயிகள் தோட்டத்தில் வளர்க்கப்படும் கோழிகளுக்குத்தான், அதிகமாக இந்நோய் தாக்கும். இக்கோழிகள் தானே இறை தேடும். கவனிப்பு குறைவாகவே இருக்கும். தடுப்பூசி போடுவதும் குறைவு. எனவே, இதுபோன்ற கோழிகளுக்கு முன்னெச்சரிக்கை தேவை.

இந்நோய் வராமல் தடுக்க, கோழிகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில், வாரம்தோறும் சனிக்கிழமை நாட்களில்

இலவசமாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கோழிகளின் பொருளாதார இழப்பை தடுக்க, விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## நீலகிரி மாவட்டத்தில் கனமழை பவானிசாகருக்கு நீர் வரத்து அதிகரிப்பு

சத்தியமங்கலம்: நீலகிரி மலைப்பகுதியில், தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்ட, இந்த அணையில் மொத்த உயரம், 120 அடியாகும். இதில் சகதி, 15 அடி கழித்து, நீர்பிடிப்பு மொத்த உயரம், 105 அடியாகும்.கடந்த, டிசம்பர் மாதம் முதல், பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பவானிசாகர் அணையின் நீர் பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில், மழை இல்லாத காரணத்தால், அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்தது. இதனால், அணையின் நீர்மட்டமும் குறைய தொடங்கியது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக, நீலகிரி மலைப்பகுதியான குன்னூர், ஊட்டியில் மழை பெய்து வருகிறது. இதனால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தண்ணீர் வரத்து அதிகரிப்பினால், அணையின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.நேற்று காலை, 8 மணியளவில், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 55.14 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 2,761 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பவானி ஆற்றில் வினாடிக்கு, 150 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 5 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டது.

**கரூரில் தொடர் மழை; மக்கள் மகிழ்ச்சி**

கரூர்: கரூரில், நேற்று காலையும் தொடர்ந்து மழை பெய்ததால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கரூர் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, அக்னி வெயிலில் இருந்து மக்கள் தப்பித்தனர். கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை, காவிரி மற்றும் அமராவதி கரையோரங்களில் நெல், வாழை, கரும்பு, வெற்றிலை போன்ற பயிர்களும், மானாவாரி பயிர்களான சோளம், ராகி, கம்பு, போன்ற பயிர்களும் விளைகின்றன.

மானாவாரி பயிர்களுக்கு லேசான தண்ணீர் இருந்தாலே போதும். நெல், வாழை, கரும்பு, வெற்றிலை போன்றவற்றுக்கு பட்டத்துக்கு ஏற்றார் போல் தண்ணீர் தேவைப்படுகிறது.

கடந்த சில நாட்களாக, கரூர் மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள், ஆறுகளில் ஓரளவு தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதன் மூலம் நிலத்தடி நீர்மட்டமும் சிறிது உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று காலை வரை லேசான மழை பெய்து கொண்டே இருந்ததால், பொதுமக்கள் மட்டுமின்றி விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர். கரூர் நகரில், ரெட்டை வாய்க்காலில் கழிவுநீர் கலந்து பெருக்கெடுத்து ஆற்றில் கலந்தது. கடந்த, மூன்று நாட்களாக வெயில் தாக்கம் அதிகம் இல்லாததால், கரூர் மாவட்டம் முழுவதும் குளிர்ச்சியான நிலை காணப்பட்டது. அதிக பட்சமாக பாலவிடுதியில், 40.10 மி.மீ., மழையும், குறைந்தளவாக குளித்தலையில், 10.60 மி.மீ., மழையும் பெய்துள்ளது. அரவக்குறிச்சியில், 17.60 மி.மீ., மழை, க.பரமத்தியில், 17.40, மாயனூரில், 22, கரூரில், 26,

அணைப்பாளையத்தில், 19, தோகமலையில், 20, பஞ்சப்பட்டியில், 20.80, கடவூரில், 46, கிருஷ்ணராயபுரத்தில், 19.20, மயிலம்பட்டியில், 45.20 என, ஆக மொத்தம், 309 மி.மீ., மழை பெய்துள்ளது.கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை சராசரியாக, 25.82 மி.மீ., பதிவாகியுள்ளது.

**மரவள்ளிக்கிழங்கு சாகுபடி தீவிரம்**

குளித்தலை: கரூர் மாவட்டம், குளித்தலை அருகே பணிக்கம்பட்டி, வலையப்பட்டி, அய்யர்மலை, பஞ்சப்பட்டி, தோகைமலை யூனியன் பகுதிகள் விவசாயம் சார்ந்த பகுதிகளாக விளங்கி வருகிறது. தோகைமலை, பாதிரிபட்டி, கழுகூர், நாகனூர், கூடலூர், புத்தூர், பில்லூர், வடசேரி, புழுதேரி உட்பட, 17 பஞ்சாயத்து பகுதிகளில் குளம், கிணற்றுப்பாசனம், மானாவாரி என பருவமழையை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். இதில், நெல், சோளம், கருஞ்சோளம், கம்பு, காட்டுக்கம்பு, வரகு, சாமை, திணை, கடலை, கரும்பு, துவரை, உழுந்து, கொள்ளு, பாசிப்பயிறு, பருத்தி, மிளகாய், வெங்காயம், சூரியகாந்தி, தென்னை, காய்வகைகள், பூ, வகைகள், வாழை உட்பட பல்வேறு பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வந்தனர். நெய்தலூர், சேப்ளாப்பட்டி, முதலைப்பட்டி என, 3 பஞ்சாயத்துக்களின் பகுதிகள் வாய்க்கால் பாசனம் மூலம் நெல், வாழை, கரும்பு, உளுந்து, பூ வகைகள் என விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது, மரவள்ளி கிழங்கு சாகுபடியை விவசாயிகள் விரும்பி வருகின்றனர். ஆழ்குழாய் கிணற்றுடன் உள்ள கிணறுகளில், மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்து வருகின்றனர். ஆத்தூர், சேலம் போன்ற பகுதிகளில் அதிகமாக பியிரிடப்பட்ட மரவள்ளி கிழங்கு கடந்த, 10 ஆண்டாக தற்போது தோகைமலை பகுதிகளில் அதிகளவில் சாகுபடி செய்துவருகினறனர்.

கார்த்திகை, மார்கழி, தை என எல்லா பட்டங்களிலும் மரவள்ளி கிழங்கு பியிரிடலாம். கரும்பு, மரவள்ளிக் கிழங்கு இரண்டும், 10 மாதம் சாகுபடி என்றாலும், கரும்பை விட மரவள்ளி கிழங்கு சாகுபடிக்கு தண்ணீர் தேவையும், பராமாரிப்பு செலவும் மிகவும் குறைவு என்கின்றனர் விவசாயிகள்.விளைச்சலாகும் மரவள்ளி கிழங்குகளை ஆத்தூர் மற்றும் சேலம் போன்ற பகுதி வியாபாரிகள் நேரில் வந்து வாங்கிச் செல்கின்றனர். தமிழக அரசு, மரவள்ளி கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும், என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

## செம்மறி ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் வராமல் தடுக்க யோசனை

கரூர்: "மழை காலத்தில், செம்மறி ஆடுகளை துள்ளுமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளது,' என கால்நடை மருத்துவ பல்கலையின் இணை பேராசிரியர் மற்றும் தலைவர் அகிலா தெரிவித்துள்ளார். செம்மறியாடுகள் கூட்டமாகவும், மந்தையாகவும் வளர்க்கப்படுவதால், மழை காலங்களில் துள்ளுமரி நோய் தாக்க வாய்ப்புள்ளது. துள்ளுமாரி நோய் எண்டிரோடாக்ஸிமியா நோய், கிளாஸ்டீரியம் வெல்சை எனப்படும் நுண்ணுயிரியினால் ஏற்படுகிறது. மழை காலங்களில் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்கு செல்லும் ஆடுகளுக்கு, இந்நோயின் பாதிப்பு அதிகம் காணப்படும். இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. நல்ல திடகாத்திரமான ஆடுகள் கூட, இந்நோயால் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகள், துள்ளிக்கொண்டு இறந்து விடும். கால்கள் நடக்க முடியாமல் விரிந்து, கழுத்து விரைத்து சிறிது கழிச்சலுடன் உடனடியாக இறந்து விடும். மழைக்காலம் வருமுன் தடுப்பூசி போடுதல் மற்றும் மழைக்காலம் முடிந்தவுடன் உள்ள பசுமையான மேய்ச்சல் தரையில், குறைந்த நேரம் மேய விடுதல் போன்ற முறைகளை கையாளலாம். செம்மறியாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்,

அருகில் உள்ள கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி, தடுப்பூசி அளித்து, ஆடுகளை பாதுகாத்து கொள்ள வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

**உயர்கிறது! மாவட்டத்தில் தொடர் மழையால் நிலத்தடி நீர்மட்டம்... சுருளி, கும்பக்கரை அருவிகளில் வெள்ளப்பெருக்கு**

ஆண்டிபட்டி: தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால் ஓடைகளில் நீர்வரத்து ஏற்பட்டது. ஒரே நாளில் பெரும்பாலான கண்மாய்கள் பாதி அளவு நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கும்பக்கரை, சுருளி அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது.

மேற்கு தொடர்ச்சி மலை வேலப்பர் கோயில் மலைப்பகுதியில் பெய்த மழையால் நாகலாறு ஓடையில் நீர் வரத்து ஏற்பட்டது. இதனால் மரிக்குண்டு பொம்மையசாமி நாயக்கர் கண்மாய், கோடாங்கி நாயக்கர் கண்மாய், பிச்சம்பட்டி கண்மாய், தெப்பம்பட்டி கண்மாய், ஜம்புலிபுத்தூர் கண்மாய், ரெங்கசமுத்திரம் கண்மாய்களுக்கு நீர் வரத்து இருந்தது.

பெரும்பாலான கண்மாய்கள் ஒரே நாளில் பாதி அளவு நிரம்பியது. பல ஆண்டுகளாக நீர் வரத்து இல்லாமல் கண்மாய்கள் வறண்டு கிடந்தன. இதனால் ஆண்டிபட்டி பகுதியில் நிலத்தடி நீர் மட்டத்தில் சரிவு ஏற்பட்டது. கிணறுகள், ஆழ்குழாய்கள் பலவும் வறண்டதால் இறவை பாசனமும் பாதிப்படைந்தது. இந்நிலையில் தற்போது பல கண்மாய்களில் நீர் தேங்கி உள்ளது. இதனால் ஆண்டிபட்டி பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் சமன் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் உயரும் வாய்ப்பு உள்ளதால் அடுத்தடுத்த சாகுபடியில் நல்ல பலன் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி நகரில் முறையான வடிகால் வசதி அமைக்கப்படாததால் ரோடுகளில் மழை நீர் ஆறாக ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் வீட்டிற்குள் புகுந்தது.

வருஷநாடு: மேகமலை,ஹவேயிஸ் மலைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையினால் சின்னச்சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேக மலை, ஹவேவிஸ் மலைப்பகுதியில் 100 க்கும் மேற்பட்ட சிற்றோடைகள் இணைந்து சின்னச்சுருளி அருவியாக உருவெடுத்துள்ளது. ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர். வழக்கமாக கோடை காலத்தில் வறண்டு கிடக்கும் சின்னச்சுருளி அருவியில் தற்போது பெய்த கனமழையால் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. சின்னச்சுருளி அருவியில் நீர் வரத்து அதிகரித்துள்ளதனை தொடர்ந்து சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது.

கும்பக்கரையில் குளிக்க தடை : பெரியகுளம்: பெரியகுளத்திலிருந்து ஏழு கி.மீ., தொலைவில் உள்ளது கும்பக்கரை அருவி. கொடைக்கானல் வனக்கோட்டம், பெரியகுளம் வனப்பகுதியின் கட்டுப்பாட்டில் உள்ளது. கும்பக்கரை அருவியில் ஆண்டு தோறும் செப்டம்பர் முதல் ஜனவரி வரை அருவியில் தண்ணீர் கொட்டும். சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்வர்.

தற்போது கொடைக்கானல் மலைப்பகுதியில் தொடர் மழை காரணமாக கும்பக்கரை அருவி பகுதியில் நீர் வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு வனத்துறை தடை விதித்துள்ளது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு தற்போது கோடை மழையால் கும்பக்கரை அருவியில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. குளிக்க தடை விதிக்கப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்

மழை அளவு (மி.மீ)

ஆண்டிபட்டி - 60.0

அரண்மனைப்புதூர் - 10.6

போடி - 40.2

கூடலூர் - 35.0

மஞ்சளாறு - 8.0

பெரியகுளம் - 6

பெரியாறு - 9.2

சோத்துப்பாறை - 17

தேக்கடி - 4.4

உத்தமபாளையம் - 46

வைகை அணை - 43

வீரபாண்டி - 18

**நீர்வரத்து அதிகரிப்பு: வைகை அணை நீர் மட்டம் கிடு கிடு உயர்வு**

ஆண்டிபட்டி: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக வைகை அணைக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர் மட்டம் நேற்று மாலை 40 அடியை எட்டியது (மொத்தம் 71 அடி). வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பெரியாறு அணையில் இருந்து திறந்து விடப்பட்டுள்ள நீரும் வைகை அணைக்கு கணிசமான அளவு வந்துகொண்டுள்ளது. இம்மாத துவக்கத்தில் வைகை அணை நீர் மட்டம் 41 அடியை கடந்தது. மதுரை சித்திரை திருவிழாவிற்காக அணையில் இருந்து தொடர்ந்து நான்கு நாட்கள் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் அணை நீர் மட்டம் மே 6 ல் 36.52 அடியாக குறைந்தது. கடந்த சில நாட்களாக வைகை அணை நீர் பிடிப்பு பகுதியான வருஷநாடு மலைப்பகுதியில் ஏற்பட்ட மழையால் ஆற்றில் நீர் வரத்து ஏற்பட்டது. பல மாதங்களுக்கு

பிறகு தற்போது ஏற்பட்டுள்ள இந்த நீர் வரத்தால் அணை நீர் மட்டம் விரைந்து உயர்கிறது. நேற்று காலை அணைக்கான நீர் வரத்து வினாடிக்கு 1149 கன அடியாக இருந்தது. அதிகரிக்கும் நீர் வரத்தால் அணை நீர் மட்டம் நேற்று மாலை 4 மணிக்கு 40.03 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 60 கன அடி வீதம் திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் வைகை அணை நீர் மட்டம் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படுத்தும் நிலையில் 23 அடியாக இருந்தது. இந்த ஆண்டு சித்திரை திருவிழாவிற்கு கணிசமான அளவில் நீர் திறந்து விடப்பட்டும், நீர் மட்டம் தற்போது 40 அடியை கடந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## 30 ஆண்டுகளுக்கு பின் கோடை மழை : ஏலக்காய் விவசாயிகள் மகிழ்ச்சி

கம்பம்: கோடையில் மழை கிடைத்திருப்பது கடந்த 30 ஆண்டுகளுக்கு பின் இப்போது தான் என்று ஏல விவசாயிகள் கூறியுள்ளனர். ஏலத்தோட்டங்களில் இந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலக்காய் சாகுபடி நடக்கிறது. ஏலக்காய் சாகுபடிக்கு மழை அடிக்கடி தேவைப்படும். கோடைகாலங்களில் மார்ச் முதல் ஜூன் வரை குறைந்தது 3 மாதங்களுக்கு நல்ல வெயில் அடிக்கும். இந்த நேரங்களில் பெரும்பாலான தோட்டங்களில் செடிகள் காய்ந்து மகசூல் கடுமையாக பாதிக்கப்படும். கிணறுகளில் உள்ள தண்ணீரை வைத்து செடிகளை காப்பாற்ற முயற்சி செய்வர். தென்மேற்கு பருவ மழை ஜூன் முதல் பெய்யத் துவங்கும். அதன் பிறகே ஏலச்செடிகள் துளிர் விடும்.கடந்த ஆண்டு ஆகஸ்டில் தான் தென்மேற்கு பருவமழை துவங்கியது. இந்நிலையில் எதிர்பாராதவிதமாக இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் இருந்தே சாரல் மழை பெய்யத்துவங்கி இன்று வரை

மழை தொடர்கிறது.இதனால் ஏலச் செடிகளுக்கு தண்ணீர் போதிய அளவு கிடைத்து வருகிறது. ஜூன் ல் தென்மேற்கு பருவ மழையும் துவங்கிவிடும். இதனால் ஏல விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

ஏலக்காய் சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர் அன்பழகன் கூறியதாவது: நல்ல மழை கிடைத்துள்ளது. இதனால் தண்ணீர் தேவை குறைந்துவிட்டது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஏலச்செடியில் அழுகல் நோய் தாக்கத் துவங்கியுள்ளது. இது ஆபத்தானது. இருந்த போதும் கடந்த 30 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு தான் கோடையில் இவ்வளவு மழை கிடைத்துள்ளது. இது ஏலக்காய் சாகுபடியை ஊக்குவிக்கும், என்றார்.

**கூடங்குளத்தில் மீண்டும் மின்உற்பத்திஇரவில் 520 மெகாவாட்டை எட்டியது**

திருநெல்வேலி: கூடங்குளம் அணுமின்நிலையத்தில் நேற்று மீண்டும் மின்உற்பத்தி துவங்கியது.நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 1000 மெகா வாட் மின்உற்பத்தி திறன் கொண்ட இரண்டு அணுஉலைகள் உள்ளன. இதில் முதலாம் அணு<உலையில் கடந்த ஜனவரி 18ம் தேதி முதல் வணிகரீதியிலான 1000 மெகாவாட் மின்உற்பத்தி நடந்துவருகிறது. கடந்த 9ம் தேதி மாலையில் திடீர் பழுது ஏற்பட்டதால் மின்உற்பத்தி நிறுத்தப்பட்டது. மூன்று நாட்களில் பழுது நீக்கப்பட்டு நேற்று 14ம் தேதி அதிகாலை 4.47 மணிக்கு மின்உற்பத்தி மீண்டும் துவங்கியது. நேற்று இரவு அணுமின் நிலைய வளாக இயக்குனர் சுந்தர் கூறுகையில், இரவு 7 மணிவாக்கில் அணு<உலையில் மின்உற்பத்தி 520 மெகாவாட்டாக இருந்தது. படிப்படியாக ஆயிரம் மெகாவாட்டை எட்டும் என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கோவை மாவட்டத்தில் பரவலாக மழை சராசரியாக 11.71 மில்லி மீட்டர் பதிவு**

கோவை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. சராசரியாக 11.71 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. கோவையில் மழை கோவை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் வெயில் கடுமையாக சுட்டெரித்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்கு உள்ளாகினர். பகல் நேரங்களில் குறிப்பாக மதிய வேளையில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாகவே காணப்பட்டது. அப்போது வெயில் 100 டிகிரியை தொட்டது. இதனால் மக்கள் வெளியில் நடமாடுவதற்கே சிரமப்பட்டனர். இந்தநிலையில் கடந்த மாத இறுதியில் தொடர்ச்சியாக கோடைமழை பெய்தது. வெப்பமும் தணிந்தது. இதற்கிடையில் அக்னி நட்சத்திரம் தொடங்கியது. இதனால் வெப்பத்தின் தாக்கம் மேலும் அதிகரிக்குமோ என்று பொதுமக்கள் அஞ்சிய நிலையில், அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் முதலே தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. 11.71 மி.மீ. மழை பதிவு இதனால் கடந்த சில மாதங்களாக வெப்பத்தில் சிக்கித்தவித்த பொதுமக்கள், தற்போது நிம்மதி அடைந்துள்ளனர். மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருவதால் குளு, குளு சீதோஷ்ணநிலை நிலவி வருகிறது. நேற்று முன்தினம் மாலை முதல் இரவு வரை தொடர்ச்சியாக மிதமாக மழை பெய்தது. இதனால் கோவை மாவட்டத்தில் சராசரியாக 11.71 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மழைஅளவு விவரம் மி. மீட்டரில் வருமாறு:-

| | | |
|---|---|---|
| அன்னூர் | - | 4 |
| பீளமேடு | - | 17.80 |

மேட்டுப்பாளையம் - 8.30

பொள்ளாச்சி - 15

பெரியநாயக்கன்

பாளையம் - 20

சூலூர் - 16.20

வேளாண்

பல்கலைக்கழகம் - 10.60

சின்கோனா - 8

சின்ன கல்லாறு - 7

வால்பாறை - 5.40

வால்பாறை தாலுகா

அலுவலகம் பகுதி - 4.20

கோவை தெற்கு பகுதி - 24

மழைநீர் தேங்கியதுஇந்த மழையால் கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் குட்டை போல தேங்கியது. ரேஸ்கோர்ஸ் நடைபாதையில் மழை நீர் தேங்கிநின்றதால் நடைப்பயிற்சி மேற்கொள்பவர்கள் அந்த வழியாக நடந்து செல்ல முடியாமல்

சிரமப்பட்டனர். சாலைகளில் ஆங்காங்கே தேங்கியிருந்த மழைநீரை மாநகராட்சி பணியாளர்கள், கால்வாய்களுக்கு திருப்பி விட்டு வெளியேற்றினர்.

அவினாசி ரோடு மேம்பாலத்தின் கீழ் மழை நீர் தேங்கி சேரும், சகதியுமாக காணப்பட்டது. இதனால் அந்த வழியாக செல்வதற்கு இரு சக்கர வாகன ஓட்டிகள் கடும் அவதிக்கு உள்ளாகினர். இதேபோல் வடகோவை மேம்பாலத்தின் கீழ், மழை நீர் தேங்கியதால் சேறும், சகதியுமாக காணப்பட்டது. உக்கடம்-செல்வபுரம் பைபாஸ் ரோட்டில் புதிதாக போடப்பட்ட தார்ச்சாலை மழை வெள்ளத்தால் ஆங்காங்கே பாதிப்படைந்துள்ளது.

அணைகள்-குளங்கள்

கோவை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் சிறுவாணி, பில்லூர், ஆழியாறு அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதேபோல் கோவையில் உள்ள குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால் கோவை மாநகரத்திற்கு ஒரு சில மாதங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை. இதேபோல் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயத்திற்கும் போதிய தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த தொடர்ச்சியாக பெய்ய வேண்டும் என்று விவசாயிகளின்எதிர்பார்ப்பாக உள்ளது.

**500 மூட்டை பருத்தி ரூ.8¼ லட்சத்துக்கு ஏலம்**



நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.8¼ லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 826 முதல் ரூ.4 ஆயிரத்து 272 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 126 முதல் ரூ.4 ஆயிரத்து 650 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**அதிகபட்சமாக 65 மி.மீட்டர் மழைப்பதிவு**



நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வந்தாலும், குமாரபாளையத்தில் அதிகபட்சமாக 65 மி.மீட்டர் மழைப் பதிவாகி உள்ளது. பரவலாக மழை நாமக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இதனால் அக்னி நட்சத்திர வெயிலில் இருந்து பொதுமக்கள் நிம்மதி அடைந்து உள்ளனர். வழக்கம்போல் நேற்று முன்தினம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கோடை மழை பெய்தது. அதிகபட்சமாக குமாரபாளையம் பகுதியில் 65.6 மி.மீட்டர் மழை பதிவானது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:- குமாரபாளையம்-65.6, மோக னூர்-19, எருமப்பட்டி-10, மங்களபுரம்-8.3, நாமக்கல் -5, ராசிபுரம்-3.2, சேந்தமங் கலம்-2, பரமத்தி வேலூர்-2, திருச்செங் கோடு-1. நாமக்கல் நகரை பொறுத்த வரையில் நேற்றும் மழை நீடித்தது. காலை வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. பிற்பகல் 2 மணி அளவில் மழை கொட்ட தொடங்கியது.இந்த மழை ஏறத்தாழ 1 மணி நேரம் நீடித்தது. இதனால் சாலைகள் மற்றும் பள்ளமான பகுதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.கொல்லிமலை இதேபோல் கொல்லிமலை யிலும் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், அங்குள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, நம் அருவி, மாசில்லா அருவி போன்ற அருவிகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இவற்றில் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து செல்வதை காண முடிகிறது. மேலும் கொல்லிமலையில் உள்ள தடுப்பணைகளிலும் தண்ணீர் தேங்கி உள்ளதால் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**கவர்னர் ரோசய்யா ஊட்டி வருகை மலர் கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்**



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் பிரசித்தி பெற்ற மலர்கண்காட்சி இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது. இந்த கண்காட்சியை கவர்னர் ரோசய்யா தொடங்கி வைப்பார் என்று அறிவிக்கப் பட்டு இருந்தது. இதையொட்டி தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக கவர்னர் ரோசய்யா நேற்று விமானம் மூலம் கோவைக்கு புறப்பட்டு வந்தார். பின்னர்அங்கிருந்து கார் மூலம் கோத்தகிரி வழியாக மாலை 5.55 மணிக்கு ஊட்டி ராஜ்பவனுக்கு வந்து சேர்ந்தார். அப்போது கலெக்டர் சங்கர் மற்றும் உயர் அதிகாரிகள் அவரை பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். வரவேற்பை பெற்றுக்கொண்ட கவர்னர் ராஜ்பவனில் ஓய்வெடுக்க சென்றார்.மலர் கண்காட்சி தொடக்க விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது. இதில் கவர்னர் கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கி வைக்கிறார். தொடக்க விழாவில் வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு

செயலாளர் ராஜேஷ் லக்கானி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் எல்.சித்ரசேனன், கலெக்டர் சங்கர் உள்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

**கோடைமழை எதிரொலி: முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கோடை மழை பெய்து வருவதால் முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தேனி, மதுரை, திண்டுக்கல் உள்பட 5 மாவட்டங்களின் நீர் ஆதாரமாக முல்லைப்பெரியாறு அணை விளங்குகிறது. கடந்த மாதம் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால், அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இந்தநிலையில் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், தேனி மாவட்டத்திலும் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதே போல் தேனி மாவட்டத்தில் சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை, வைகை அணை ஆகியவற்றிற்கும் நீர்வரத்து ஏற்பட்டு உள்ளது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி முல்லைப்பெரியாறு அணையின்

நீர்மட்டம் 115.50 அடியாக இருந்தது. நீர்வரத்து வினாடிக்கு 566 கனஅடியாக உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 150 கனஅடி தண்ணீர் குடிநீருக்காக திறந்து விடப்பட்டுள்ளது. 1,817 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது.

வைகை அணை

வைகை அணையின் நீர்மட்டம் 37.30 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 314 கனஅடி தண்ணீர் வரத்தும், மதுரை மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 750 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 43.20 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 66 கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை. 228.93 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து வினாடிக்கு 10 கனஅடியாக உள்ளது. அணையில் வினாடிக்கு 10 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 100.22 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது.

நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு (மில்லி மீட்டரில்) :–முல்லைப்பெரியாறு அணை – 6, தேக்கடி – 3, கூடலூர் – 3, உத்தமபாளையம் – 2, சண்முகாநதி அணை – 8, வீரபாண்டி – 2, வைகை அணை – 1.2.

**ஆவுடையார்கோவிலில், அதிசய உருளைக்கிழங்கு**



ஆவுடையார்கோவில் கடைவீதி பகுதியில் உள்ள ஒரு காய்கறி கடையில் மாணிக்க வாசகர் நகரை சேர்ந்த விவசாயி கோவிந்தன் தனது வீட்டிற்கு கத்தரிக்காய், உருளைக்கிழங்கு உள்பட பல்வேறு காய்கறிகளை வாங்கி வந்தார். வீட்டுக்கு வந்ததும் அந்த காய்கறிகளை எடுத்து பார்த்தபோது ஒரு உருளைக்கிழங்கு மனித உருவம் போன்ற தோற்றத்துடன் இருப்பதை பார்த்தார். இதனைத்தொடர்ந்து அதை சமையலுக்கு பயன்படுத்தாமல் வீட்டில் வைத்து இருந்தார். இது குறித்து தகவல் அறிந்த அப்பகுதி மக்கள் கோவிந்தன் வீட்டுக்கு வந்து அந்த அதிசய உருளைக்கிழங்கை பார்த்து சென்றனர்.

**பூக்கள் விலை திடீர் வீழ்ச்சி குண்டுமல்லி கிலோ ரூ.50-க்கு விற்பனை**



சேலத்தில் பூக்கள் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் குண்டுமல்லி கிலோ ரூ.50-க்கு விற்கப் பட்டது. கிலோ ரூ.50-க்கு விற்பனை

சேலம் கடைவீதியில் உள்ள வ.உ.சி. பூ மார்க்கெட்டிற்கு மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் இருந்து ஏராளமான விவசாயிகள் தங்களது தோட்டத்தில் பூக்கும் பூக்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தற்போது மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்து உள்ளதால் பூக்கள் விலை

கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் வீராணம், மேச்சேரி, வாழகொட்டப்பட்டி, புதுப்பட்டி, தொட்டிவலசு உள்ளிட்ட பகுதியில் இருந்து குண்டுமல்லி, சன்னமல்லி ஆகிய பூக்களின் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கடந்த மாதம் கிலோ ரூ.190 வரை விற்ற குண்டுமல்லி நேற்று கிலோ ரூ.50-க்கு விற்கப்பட்டது. இதேபோல், கடந்த மாதம் கிலோ ரூ.170 வரை விற்ற சன்னமல்லி நேற்று கிலோ ரூ.60-க்கும், கனகாம் பரம் பூ கிலோ ரூ.160-க்கும் விற்பனை செய்யப்பட்டது.விவசாயிகள் கவலைசம்பங்கி கிலோ ரூ.20-க்கும், அரளி பூ கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையும், கோழிக்கொண்டை பூ கிலோ ரூ.20-க்கும், பட்டன்ரோஸ் கிலோ ரூ.40-க்கும், கலர் பூ கிலோ ரூ.30-க்கும், காக்கட்டான் பூ கிலோ ரூ.40-க்கும் விற்கப்பட்டது. இதுபற்றி விவசாயிகள் கூறும் போது, ‘தொடர் மழை காரணமாக பூக்களின் உற்பத்தி அதிகரித்து உள்ளது. மார்க்கெட்டிற்கு பூக்களின் வரத்து அதிகரிப்பால் விலையில் கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் கூலி ஆட்களுக்கு கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். மேலும் விலையில் இன்னும் வீழ்ச்சி அடைந்தால் பூக்களை பறிக்காமல் விட்டு விடலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்’ என்றனர்.

**மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக கடலூரில் 40.10 மில்லி மீட்டர் பதிவானது**



கடலூர்

மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக கடலூரில் 40.10 மில்லி மீட்டர் பதிவாகியது.கோடை மழைகடலூர் மாவட்டத்தில் கோடை வெயில் கொளுத்தி வந்தது. இதற்கிடையில் கடந்த 4-ந் தேதி முதல் அக்னி நட்சத்திரமும் தொடங்கியதால் வெயில் சுட்டெரித்தது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமப்பட்டு வந்தனர். கடுமையான வெயிலால் வீட்டை விட்டு வெளியேற முடியாமலும், வீட்டுக்குள் இருக்கமுடியாமலும் தவித்தனர்.இந்நிலையில் வெப்பச்சலனத்தின் காரணமாக கடலூரில் கடந்த 3 நாட்களாக விட்டு, விட்டு கோடை மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. சில இடங்களில் கன மழையும் பெய்துள்ளது. இந்த மழையினால் தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கி நிற்பதை காண முடிந்தது.கன மழைநேற்று 4-வது நாளாக அதிகாலை சுமார் 4 மணியில் இருந்து 5 மணி வரை கன மழை கொட்டி தீர்த்தது. பலத்த இடி, மின்னலுடன் பெய்த மழையினால் சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கி நின்றது. குறிப்பாக மஞ்சக்குப்பம் மைதானம், அண்ணா விளையாட்டு மைதானம், குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்கிறது. காலை நேரத்தில் மழை பெய்ததால் கடலூர் உழவர் சந்தை சேறும், சகதியுமாக மாறியது. இதனால் காய்கறி வாங்க வந்த பொதுமக்களும், காய்கறிகள் விற்பனை செய்த மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.இதேபோல் சிதம்பரம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், வானமாதேவி, குப்பநத்தம் உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. மழை அளவுஇருப்பினும் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கடலூரில் 40.10 மில்லி மீட்டரும், குறைந்தபட்சமாக வேப்பூர், பெலாந்துறை ஆகிய இடங்களில் 3 மில்லி

மீட்டர் மழையும் பதிவாகியது. மற்ற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| வானமாதேவி | -33 |
| கொத்தவாச்சேரி | -28 |
| அண்ணாமலைநகர்-25.40 | |
| சிதம்பரம் | -25 |
| புவனகிரி | -15 |
| குப்பநத்தம் | -10.60 |
| பரங்கிப்பேட்டை | -10 |
| சேத்தியாத்தோப்பு | -9.20 |
| பண்ருட்டி | -8.30 |
| காட்டுமன்னார்கோவில்-8 | |
| விருத்தாசலம் | -7.60 |
| லால்பேட்டை | -5 |
| ஸ்ரீமுஷ்ணம் -5 | |

**கம்பம் பகுதியில் சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பு; விலை சரிவு**



கம்பம் பகுதியில் சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்தால், அதன் விலை படிப்படியாக சரிந்து வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பு</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் தென்னை, வாழை, திராட்சை, மற்றும் காய்கறிகள் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் காய்கறிகள் மதுரை, திருச்சி, சின்னமனூர் மற்றும் கேரள மாநிலத்திற்கு அதிக அளவு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு வரை வரத்து குறைவின் காரணமாக சின்ன வெங்காயம் கிலோ ரூ. 25 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது கடந்த சில தினங்களாக வரத்து அதிகரிப்பின் காரணமாக கிலோ ரூ. 10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>விவசாயிகளுக்கு நஷ்டம்</u>

இதுகுறித்து விவசாயிகளிடம் கேட்ட போது, 'கடந்த 10 தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்டது. இதில்

விவசாயிகளுக்கு போதுமான அளவு லாபம் கிடைத்து வந்தது. தற்போது சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பின் காரணமாக விலை படிப்படியாக குறைந்து வருகிறது. உரம், மருந்து, வேலையாட்கள் கூலி உள்ளிட்ட செலவுகள் அனைத்தும் அதிகரித்து வருவதால் நஷ்டமே ஏற்பட்டு உள்ளது' என்றனர்.

**கம்பம் பகுதியில் தொடர் சாரல் மழை: திராட்சையில் செவட்டை நோய் தாக்குதல் அதிகரிப்பு விளைச்சல் பாதியாக குறைந்தது**



கம்பம் பகுதியில் தொடர் சாரல் மழை காரணமாக திராட்சையில் செவட்டை நோய் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனால் இந்த ஆண்டு விளைச்சல் பாதியாக குறைந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

செவட்டை நோய் தாக்குதல்

தேனி மாவட்டம் கம்பத்தை சுற்றியுள்ள பகுதிகளான கூடலூர், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி, ஆனைமலையன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கருப்பு பன்னீர் திராட்சை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் திராட்சைகள் மதுரை, சென்னை, திருச்சி

உள்ளிட்ட பகுதிகளுக்கும் மற்றும் கேரளா மாநிலத்திற்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த கருப்பு பன்னீர் திராட்சை கொடிகளில் அதிக மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும் செவட்டை, சாம்பல் மற்றும் கருகல் உள்ளிட்ட நோய்கள் தாக்கி வருகிறது. இந்த நிலையில் கடந்த சில தினங்களாக கம்பம் பகுதியில் தொடர் சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் பிஞ்சாக இளம் கொடிகளில் உள்ள திராட்சைகளில் செவட்டை நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. தொடர்ந்து விவசாயிகள் மருந்து தெளித்து வந்தாலும் முற்றிலும் இந்த நோயை கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

<u>தோட்டக்கலைத்துறையினர் ஆய்வு</u>

இதுகுறித்து அப்பகுதி திராட்சை சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் கேட்ட போது, அவர்கள் கூறியதாவது:–

இந்த செவட்டை நோய் தாக்குதலின் காரணமாக பிஞ்சுகள் உதிர்ந்து மகசூல் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால் விளைச்சல் பாதியாக குறைந்து உள்ளது. ஏற்கனவே திராட்சை விவசாயத்தில் நஷ்டம் அடைந்து உள்ளனர். தற்போது நோய் தாக்குதல் அதிகரிப்பால் திராட்சை கொடிகளை அழித்து விட்டு மாற்று விவசாயத்திற்கு மாறி வருகின்றனர்.

ஆகவே இந்த நோய் தாக்குதலை தடுக்கவும், விளைச்சலை பெருக்கவும் தோட்டக்கலைத்துறையினர் முன்கூட்டியே ஆய்வு செய்ய வேண்டும். மேலும் நோய் தாக்குதலுக்குள்ளான திராட்சை கொடிகளில் எந்த வகை மருந்துகளை தெளிக்கவேண்டும் என்று விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தொடர் மழையால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு பொதுமக்கள் மகிழ்ச்சி**



கடமலை – மயிலை ஒன்றிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>வெள்ளப்பெருக்கு அபாயம்</u>

தேனி மாவட்டம் கடமலை–மயிலை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களிலும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வருகிறது. மேலும் இரவு நேரங்களில் கனமழையும் பெய்து வருகிறது. குறிப்பாக வைகை ஆறு உற்பத்தியாகும் வெள்ளிமலை வனப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

அதன் காரணமாக வைகை ஆற்றில் தற்போது நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கடமலை–மயிலை ஒன்றியத்தில் அதிக அளவு வெயில் காணப்பட்டது. ஆனால் கடந்த மூன்று நாட்களாக வெயில் அளவு முற்றிலுமாக குறைந்து மேகமூட்டமாக காணப்படுகிறது. மேலும் இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வீசி வருகிறது. மேலும் இரவு நேரங்களில் தொடர்ந்து மழை பெய்து

வருகிறது. இதனால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

<u>சித்திரை மாதத்தில் நீர்வரத்து</u>

வெயில் காலம் தொடங்கி சில நாட்கள் வெயிலின் தாக்கத்தால் அவதிப்பட்ட பொதுமக்கள் தற்போது தொடர் மழை காரணமாக பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் சித்திரை மாதம் வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது ஆச்சரியமளிப்பதாகவும், கடந்த 18 ஆண்டுகளுக்கு முன்பு சித்திரை மாதம் கடமலை–மயிலை ஒன்றியத்தில் மழை பெய்து வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டது.

அதன் பின்னர் இந்த ஆண்டு தான் சித்திரை மாதம் வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உறைகிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து குடிநீர் தட்டுப்பாடு நீங்கியது என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். மேலும் தற்போது தொடர் மழை பெய்வது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் மழை காரணமாக முருங்கை பூக்கள் அனைத்தும் உதிர்ந்து விட்டது. அதே போல முந்திரி, இலவம், தக்காளி ஆகியவற்றை சாகுபடி செய்த விவசாயிகள் மழை காரணமாக நஷ்டம் அடைந்துள்ளனர்.

**நன்னிலம் பகுதியில் தொடர் மழை பருத்தி விவசாயிகள் கவலை**



நன்னிலம் அருகே உள்ள பூந்தோட்டத்தில் ஒரு பருத்தி வயலில் மழை நீர் தேங்கி நிற்பதை படத்தில் காணலாம்.

நன்னிலம் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் பருத்தி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.மழைநன்னிலம் பகுதியில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். இந்த ஆண்டு நிலவிய தட்பவெப்ப நிலை காரணமாக பருத்தி பயிர் நன்றாக இருந்தது. கடந்த 1 வாரமாக வெப்பச்சலனம் காரணமாக நன்னிலம் பகுதியில் மழை பெய்து வருகிறது. அக்னி நட்சத்திரத்தில் மழை பெய்து வருவதால் வெயிலின் தாக்கம் குறைந்து உள்ளது. நன்னிலம் வேளாண்மை கோட்டத்தில் பூந்தோட்டம் பகுதியில் பருத்தி பயிர் சுமார் 400 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது தொடர் மழை பெய்து வருகிறது. அதன் காரணமாக பருத்தி வயல்களில் மழை நீர் தேங்கி உள்ளது. மேலும் தொடர்ந்து மழை பெய்தால் பருத்தி பயிரை பாதிக்கும் என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:- இதுவரை பருத்தி பயிருக்கு எந்த பாதிப்பும் இல்லை. தற்போது பருத்தி பயிர் பூக்கும் தருவாயில் உள்ளது. இந்த நிலையில் தொடர்ந்து மழை பெய்தால் பருத்தி பயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கூறினர்.

**நோய்களில் இருந்து குணப்படுத்தும் சர்வரோக நிவாரணி 'சரக்கொன்றை' மரம்**



வாலாஜாபேட்டை பத்திரப்பதிவு அலுவலகம் எதிரே பி.எஸ்.என்.எல். செல்போன் கோபுரம் அருகே உள்ள ‘சரக்கொன்றை’ மரம், சர்வரோக நிவாரணி என்று மக்களாலும், மருத்துவர்களாலும் அழைக்கப்படுகிறது. இந்த கோடை காலத்தில், மக்களை மகிழ வைக்கும் அளவில் மரத்தில் உள்ள மஞ்சள் பூக்கள் தோரணங்களாக தொங்கி காட்சி அளிப்பதால் பார்ப்போரை பரவசப்படுத்துகிறது.கோடை காலங்களில் இலைகள் கொட்டிப்போய் ஒரே மஞ்சள் பூக்களாக சரம், சரமாக மரத்தில் தொங்குவது அழகாக உள்ளது.‘சரக்கொன்றை’ என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த மரத்தை அமாவாசை அன்று பூஜை செய்து வழிபட்டால் தீய சக்திகளின் தாக்கத்தில் இருந்து விடுபடலாம் என மக்கள் நம்புகின்றனர்.இந்த மரத்தின் காய்கள் 2 அடி அளவு முருங்கைக்காய் போல் நீண்டு இருக்கும். இதன் இலை, விழுது சரும நோய்களை குணப்படுத்தும்.இதன் பூவை கசாயமாக வைத்து குடித்தால் சர்க்கரை நோய், வயிற்று கோளாறு போன்ற நோய்கள் குணமாகும்.

மரப்பட்டை, இலை ஆகியவற்றை அரைத்துப் பூசினால் சிரங்கு நோய் குணமாகும். மரத்தின் வேரினை கசாயமாக வைத்து குடித்தால் மலச்சிக்கலை போக்கி புழுக்களை கொல்லும். கீல் வாதத்திற்கும் சிறந்த மருந்தாகும். இதன் விதை எண்ணெய் உடலுக்கு வலிமை தரும். இதன் மரக்குச்சிகளை கொண்டு பல் துலக்கினால் ஈறு பலப்படும்.

ஆகவே, இந்த சரக்கொன்றை மரத்தை ‘சர்வரோக நிவாரணி’ என்று அழைப்பதில் வியப்பேதுமில்லை.

தினகரன்

## மேட்டூருக்குநீர்வரத்துஅதிகரிப்பு




மேட்டூர்: கடந்த இரு தினங்களாக மேட்டூர் மற்றும் தர்மபுரி வனப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 782 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 917 கனஅடியாக அதிகரித்தது. குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. நேற்று முன்தினம், 67.08 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 67.10 அடியாக உயர்ந்தது. அணையில் நீர்இருப்பு 30.26 டிஎம்சி.

**கோடை மழையால் விவசாயிகள் உற்சாகம் : தஞ்சையில் 25,000 ஏக்கரில் முன்பட்ட குறுவை சாகுபடி**



கும்பகோணம்: காவிரி டெல்டாவில் குறுவை, சம்பா, தாளடி, கோடைநெல் சாகுபடி நடைபெறுவது வழக்கம். இதில் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 1.10 லட்சம் ஏக்கரில் சாகுபடி நடைபெறும். மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் தண்ணீர் வராதபோது பம்ப் செட் மூலம் குறுவை சாகுபடி விவசாயிகள் செய்து வருகின்றனர். இதனால் சாகுபடி பரப்பளவு 60,000 ஏக்கராக குறைந்து வருகிறது. காவிரி டெல்டாவில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் பூமியில் ஈரப்பதம் உள்ளது. இதனால் வயல்களை உழும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறு பாசனம் மூலம் பெரும்பாலும் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும். தற்போது பெய்த மழையை கொண்டு 25 ஆயிரம் ஏக்கரில் முன்பட்ட குறுவை சாகுபடிக்கான பணிகளை விவசாயிகள் துவங்கியுள்ளனர். குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால் மேட்டூர் அணையில் போதியளவு தண்ணீர் இல்லாததால் இந்தாண்டு குறுவை சாகுபடிக்கு காவிரி நீர் கிடைப்பது சாத்தியமற்ற சூழ்நிலை உள்ளது. எனவே பம்ப்

செட் வைத்திருக்கும் விவசாயிகள், அவர்களது இடத்தில் நாற்றுவிட்டு பராமரித்து வைத்திருந்தால் ஆகஸ்ட் மாதத்தில் நாற்றை பறித்து நட்டுவிடலாம் என்று கருதி பணிகளை துவங்கியுள்ளனர். கும்பகோணம் பகுதியில் அசூர், சுவாமிமலை, பட்டீஸ்வரத்தில் முன்பட்ட குறுவை பணி நடந்து வருகிறது. செப்டம்பரில் துவங்கும் பருவமழைக்கு முன் அறுவடையை முடித்துவிடலாம் என்பதால் முழுவீச்சில் சாகுபடி பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## 2014-15-ம் ஆண்டில் உணவுதானிய உற்பத்தி 5 சதவீதம் சரியும்




புதுடெல்லி: 2014-15-ம் பருவ ஆண்டில் (ஜூலை-ஜூன் வரை) நாட்டின் உணவு தானிய உற்பத்தி 5.25 சதவீதம் வரை சரிந்து 25.11 கோடி டன்னாக வீழ்ச்சியடையும் என்று மத்திய அரசு கணித்துள்ளது. இது குறித்து மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கடந்த 2013-14 பருவ ஆண்டில் நாட்டின் உணவு தானிய உற்பத்தி 26.50 கோடி டன்னாக இருந்தது. ஆனால், நடப்பு 2014-15-ம் பருவ ஆண்டில் (ஜூலை-ஜூன் வரை) உணவு தானிய உற்பத்தி 5.25 சதவீதம் வரை குறைந்து, 25.11 கோடி டன்னாக சரியும்

என்று கணித்துள்ளோம். கடந்த இரு மாதங்களாக நாட்டின் பல மாநிலங்களில் நிலவிய மோசமான பருவநிலை, பருவம் தவறிய மழை ஆகியவற்றால், காரீப் மற்றும் ராபி பருவ உற்பத்தியில் பெரும்பாலான தானியங்கள் உற்பத்தி குறைந்துள்ளது. கடந்த 2013-14ம் ஆண்டில் அரிசி உற்பத்தி 10.66 கோடி டன்னாக இருந்தது. ஆனால், நடப்பு ஆண்டில் உற்பத்தி 10.25 கோடி டன்னாக குறையும். கோதுமை உற்பத்தியும் கடந்த ஆண்டு இருந்த 9.58 கோடி டன்னைக் காட்டிலும் சரிந்து, 9.07 கோடி டன்னாக சரியலாம். உற்பத்திக் குறைவால் அரசின் கையிருப்பு அளவும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் அரசிடம் அரிசி மற்றும் கோதுமை இருப்பு 5.11 கோடி டன் இருந்தது. மே மாதத்தில் அரசின் கையிருப்பு 2.1 கோடி டன்னாக குறைந்துள்ளது என்று அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**தமிழ்நாட்டில் இன்றும் அநேக இடங்களில் மழை நீடிக்கும்: வானிலை ஆய்வு மையம்**



சென்னை, மே.15-

சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:- குமரிக்கடலில் நிலைகொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி நகர்ந்து லட்சத்தீவு பகுதிக்கு சென்றுவிட்டது. அதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று (வெள்ளிக்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும். அதாவது தொடர்ந்து மழை பெய்து வருவதால் இன்றும் மழை நீடிக்கும். ஓரிரு இடங்களில் கனத்த மழை பெய்யும். சென்னையில் சில பகுதிகளில் லேசாக மழை பெய்யும். இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார். நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:- இளையான்குடி 12 செ.மீ., பொள்ளாச்சி 10 செ.மீ., ராஜபாளையம் 9 செ.மீ., குமாரப்பாளையம் 7 செ.மீ., பெரியநாயக்கன் பாளையம், கெய்ட்டி, ராமேசுவரம், ஆண்டிப்பட்டி, கொடைக்கானல், குந்தா பாலம், குன்னூர் தலா 6 செ.மீ. தமிழ்நாட்டில் மேலும் 120 இடங்களில் மழை பெய்துள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தூத்துக்குடியில் மழையால் உற்பத்தி பாதிப்பு:குஜராத்திலிருந்து வந்தது 40 ஆயிரம் டன் உப்பு**




தொடர் மழை, தொழிலாளர் பற்றாக்குறை, ஆலைகளின் கழிவால் தரம் குறைவு என தூத்துக்குடி மாவட்டத்தில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு வந்த நிலையில், முதல்முறையாக குஜராத்தில் இருந்து கப்பல் மூலம் 40 ஆயிரத்து 250 டன் உப்பு வியாழக்கிழமை தூத்துக்குடிக்கு கொண்டு வரப்பட்டது.

தமிழகத்தின் 70 சதவீத உப்பு உற்பத்தியைக் கொண்ட தூத்துக்குடி மாவட்டத்தில் ஏறத்தாழ 25 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் முதல் மே மாதம் வரை உப்பு உற்பத்தி அதிகமாக இருக்கும். இதனால், உள்நாட்டு தேவை மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், தொடர் மழை காரணமாக உப்பளங்களில் உப்பு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தைச்

சுற்றி அனல் மின் நிலையங்கள், தனியார் ரசாயன நிறுவனங்கள் அதிகம் உள்ளதால் உப்பின் தரம் குறையத் தொடங்கியதாகப் புகார் எழுந்தது. இதனால், தூத்துக்குடி மாவட்டத்தில் உப்பை நம்பி நடைபெறும் மீன்பிடித் தொழில், மீன் பதனிடுதல் தொழில் ஆகியவற்றுக்காக போதிய உப்பு கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, குஜராத் மாநிலத்தில் இருந்து கப்பல் மூலம் உப்பு இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, முதல் முறையாக குஜராத்தில் இருந்து 40 ஆயிரத்து 250 டன் உப்பு "ஜெம் ஆப் பாரதீப்' என்ற கப்பல் மூலம் தூத்துக்குடி வஉசி துறைமுகத்துக்கு வியாழக்கிழமை கொண்டு வரப்பட்டது. பின்னர், உடனடியாக கப்பலில் இருந்து இறக்கப்பட்டு தூத்துக்குடியில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன.

**தென் மேற்குப் பருவ மழை மே 30-இல் தொடங்க வாய்ப்பு**

இந்தியாவில் தென்மேற்குப் பருவமழை மே 30-ஆம் தேதி தொடங்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருவ மழை பெய்வதுண்டு. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தென்மேற்கு பருவ மழையே முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது.

இந்த நிலையில் 2015-ஆம் ஆண்டுக்கான தென்மேற்கு பருவ மழை சராசரியாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட முதல் கட்ட நீண்டகால முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது பருவமழை கேரள மாநிலத்தில் வரும் 30-ஆம் தேதி தொடங்கும் என்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வானிலை ஆய்வு மைய அறிக்கை விவரம்: வடமேற்கு இந்தியாவில் நிலவும்

குறைந்தபட்ச வெப்பநிலை, தென் தீபகற்பத்தில் பருவ மழைக்கு முன் பெய்யும் மழை உள்ளிட்டவை பருவ மழை தொடக்கத்தின் காரணிகளாகத் திகழ்கின்றன.

மேலும் வங்கக் கடல், அந்தமான் கடல் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இவற்றின் காரணமாக கேரளத்தில் மே 30-ஆம் தேதி பருவமழை தொடங்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லுக்கு ஆதரவுவிலை வழங்குவது குறித்து பரிசீலித்துமுடிவு: முதல்வர் சித்தராமையா**

நெல்லுக்கு ஆதரவுவிலை வழங்குவது குறித்து பரிசீலித்து முடிவு செய்வதாக தன்னை சந்தித்த விவசாயிகளிடம் முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரு, கிருஷ்ணா அரசினர் இல்லத்தில் வியாழக்கிழமை கர்நாடகமாநில விவசாயிகள் சங்கம்மற்றும் பசுமைசேனை தலைவர் உச்சவனஹள்ளி மஞ்சுநாத் தலைமையிலான விவசாயிகள் முதல்வர்சித்தராமையாவை சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் மகாதேவபிரசாத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

நெல் கொள்முதல் மையங்களை திறக்க வேண்டும், நெல்லுக்கு ஆதரவுவிலை அறிவிக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாவணகெரே முழு அடைப்பு போராட்டத்திற்கு வெள்ளிக்கிழமை அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இதன்பின்னணியில் முதல்வர் சித்தராமையாவிடம் விவசாயிகள் கோரிக்கைமனு அளித்தனர். மனுவை பெற்றுக்கொண்டு முதல்வர் சித்தராமையா பேசியது: நெல் கொள்முதல் மையங்கள் திறப்பது, நெல்லுக்கு ஆதரவுவிலை வழங்குவது,

எவ்வளவு வழங்குவது என்பது குறித்து அமைச்சரவைக்கூட்டத்தில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும். குறைந்தப்பட்ச கொள்முதல்விலையை அறிவிப்பதோடு மத்திய அரசு முடிவடைந்துவிடுகிறது.

ஆனால் ஆதரவுவிலை கொடுக்குமாறு மாநில அரசுக்கு விவசாயிகள் அழுத்தம் கொடுக்கிறார்கள். மாநில அரசின் நிதிநிலை குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாகும். எனவே, ஆதரவுவிலை கேட்டு மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுங்கள். விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற தீவிரமுயற்சி எடுப்போம். எனவே, தாவணகெரே முழு அடைப்புபோராட்டத்தை விவசாயிகள் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார் அவர்.

இந்த சந்திப்பு குறித்து மஞ்சுநாத் கூறியது: முதல்வரின் வேண்டுகோளை அடுத்து தாவணகெரே முழு அடைப்பு போராட்டத்தை கைவிடுகிறோம். எங்களுக்கு வாக்குறுதிஅளித்தப்படி செயல்படதவறினால் பெங்களூரு, தாவணகெரேவில் தீவிரபோராட்டம் நடத்துவோம் என்றார் அவர்.

**தரமான விதைகளை விற்பனை செய்ய வேண்டும்**

தனியார் விதை விற்பனையாளர்கள் நல்ல தரமான, வீரியமான விதைகளைத் தேர்ந்தெடுத்து கொள்முதல் செய்து விற்க வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குநர் ஸ்டான்லி தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் நடந்த வேளாண் இடுபொருள் விற்பனையாளர்கள் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அவர் கூறியதாவது:

வேளாண் உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிப்பது விதைகள். வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதும், உற்பத்தி இழப்பு ஏற்படுவதும் தரமான விதைகளைப் பொருத்தே அமையும். உரங்கள் உள்ளிட்டவை அடுத்த பட்சம்தான். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விதைகள் 75 சதவீதம்

தனியார் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன. மீதமுள்ள 25 சதவீதம் மட்டுமே கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண் மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.கடந்த காலங்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,750 விதை மாதிரிகள் எடுத்ததில் 170 மாதிரிகள் தரமற்றவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது 10 சதவீதம் ஆகும். இவ்வாறு கண்டறியப்பட்ட விதைகளை விற்பனை செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தும் முன், விதை விற்பனை மையங்கள் அவற்றை விற்பனை செய்து விடுகின்றன. இதனால் மாதிரி எடுத்தும் பயனில்லாத நிலைதான் உள்ளது.எனவே, தனியார் விதை விற்பனையாளர்கள் நல்ல தரமான, வீரியமான விதைகளைத் தேர்வு செய்து கொள்முதல் செய்ய வேண்டும். மேலும், விதைகளை நல்ல காற்றோட்ட வசதியுள்ள இடங்களில் இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும். சிமென்ட் மூட்டை உள்ளிட்ட மூட்டைகள் அடுக்கியுள்ள பகுதியில் விதைகளை வைத்திருக்கக் கூடாது.விதைகளை உமி போட்டு அடுக்கி வைக்க வேண்டும். 50 கிலோ விதை மூட்டை என்றால் 5 அடுக்காக வைக்கலாம். 30 கிலோ மூட்டை என்றால் 7 அடுக்காக வைக்கலாம். விதை இருப்பு குறித்த பட்டியலை விற்பனையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும். இதில் இருந்து தவறும் தனியார் இடுபொருள் விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்வது உள்ளிட்ட பல்வேறு தண்டைக்குள்ளாக்கப்படுவர் என்றார் அவர்.

**நெல்லுக்கு ஆதரவு விலை: விவசாயிகளிடம் சித்தராமையா உறுதி**

கர்நாடகத்தில் நெல்லுக்கு ஆதரவு விலை வழங்குவது குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்படும் என்று, விவசாயிகளிடம் முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.பெங்களூரு கிருஷ்ணா அரசு இல்லத்தில் வியாழக்கிழமை கர்நாடக மாநில விவசாயிகள் சங்கம் மற்றும் பசுமைசேனை தலைவர் உச்சவனஹள்ளி மஞ்சுநாத் தலைமையிலான விவசாயிகள் முதல்வர்

சித்தராமையாவைச் சந்தித்துப்பேசினர்.இந்தச் சந்திப்பின் போது கூட்டுறவுத் துறை அமைச்சர் மகாதேவபிரசாத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.நெல் கொள்முதல் மையங்களைத் திறக்க வேண்டும், நெல்லுக்கு ஆதரவு விலை அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாவணகெரேவில் முழு அடைப்பு போராட்டத்திற்கு வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னணியில் முதல்வர் சித்தராமையாவிடம் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்டு முதல்வர் சித்தராமையா, "நெல் கொள்முதல் மையங்களைத் திறப்பது, நெல்லுக்கு ஆதரவு விலை வழங்குவது ஆகியவை குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.மாநில அரசின் நிதிநிலை குறிப்பிட்ட எல்லைக்குள்பட்டதாகும். எனவே, நெல்லுக்கு ஆதரவுவிலை கேட்டு, மத்திய அரசை விவசாயிகள் வலியுறுத்த வேண்டும். விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற தீவிர முயற்சி எடுப்போம். எனவே, தாவணகெரே முழு அடைப்பு போராட்டத்தை விவசாயிகள் கைவிட வேண்டும்' என்றார்.

இந்தச் சந்திப்பு குறித்து மஞ்சுநாத் கூறியது:

முதல்வரின் வேண்டுகோளை ஏற்று தாவணகெரே முழு அடைப்பு போராட்டத்தை கைவிடுகிறோம். எங்களுக்கு வாக்குறுதி அளித்தபடி செயல்படத் தவறினால் பெங்களூரு, தாவணகெரேவில் தீவிரப் போராட்டம் நடத்துவோம் என்றார்.

**மதுரையில் தொடரும் கோடை மழை**

மதுரை மாவட்டத்தில் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் வெப்பம் தணிந்து குளிர்ந்த சூழல் நிலவி வருகிறது. மதுரை மாவட்டத்தில் புதன்கிழமை முதல் வியாழக்கிழமை காலை வரை பெய்துள்ள மழை அளவு (மில்லி மீட்டரில்): மதுரை 2.1, வாடிப்பட்டி ஆண்டிபட்டி பங்களா 23, குப்பணம்பட்டி 4, சாத்தையாறு அணை 20, மேட்டுப்பட்டி 7, கள்ளந்திரி 9, சிட்டம்பட்டி 0.6, புலிப்பட்டி 16.2, மேலூர் 1.2, தனியாமங்கலம் 2, இடையபட்டி 1, விரகனூர் 6. வியாழக்கிழமை பகலில் வெப்பம் இருந்த நிலையில் மாலையில் சாரல் மழை பெய்தது. குளிர் காற்றும் அவ்வப்போது வீசியது. மழையால் வெப்பம் தணிந்த சூழல் இருந்தாலும், நகரின் பெரும்பாலான சாலைகள் சேறும் சகதியுமாக இருப்பதால் போக்குவரத்தில் சிரமம் இருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

பாதாள சாக்கடைக் கால்வாய்க்காக தோண்டப்பட்ட சாலைகள் சரியாக சீரமைக்கப்படவில்லை என்பதால் மழைக்கு சாலைகள் நடக்கக்கூட முடியாத அளவுக்கு சேதமாக உள்ளன.

**சராசரிக்கும் அதிகமாக கோடை மழை 950 ஹெக்டேரில் நெல், பயறு வகைகள் சாகுபடி**

மதுரை மாவட்டத்தில் கோடை மழை பரவலாகப் பெய்து வருவதால் 950 ஹெக்டேர் பரப்பில் நெல் மற்றும் பயறு வகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் மே மாதம் வரையிலான கோடை மழை சராசரியாக 178.8 மிமீ பெய்வது வழக்கம். நிகழாண்டில் தற்போது வரை (மே 14) 274.04 மிமீ மழை பெய்துள்ளது. இது சராசரியைக் காட்டிலும் 95.24 மிமீ அதிகமாகும். மாவட்டத்தில் இப்போது பரவலாகப் பெய்து வரும் மழையின் காரணமாக கொட்டாம்பட்டி, சேடப்பட்டி, திருமங்கலம், தே.கல்லுப்பட்டி, கள்ளிக்குடி வட்டாரங்களில் நெல் மற்றும் பயறு

வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. நெல் 900 ஹெக்டேரிலும், பயறு வகைகள் 25 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துப் பயிர்கள் 30 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக வேளாண் இணை இயக்குநர் கு.ரா.சாரநாத்பாபு கூறியது: மதுரை மாவட்டத்தில் இப்போது பெய்து வரும் கோடை மழை பல பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எள், சோளம் மற்றும் நெற்பயிரின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும். மேலும் கோடை உழவு செய்வதன் மூலம் மழைநீரை வடிந்தோட விடாமல் தடுத்து நிலத்தடி நீரை உயர்த்தலாம். மேலும் பண்ணைக் குட்டைகளில் சேமித்து பின்பு நீர்ப்பாசனத்துக்கும், கால்நடைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்போது பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி குறுகிய காலப் பயிர்களான பயறு வகைகளைச் சாகுபடி செய்யலாம். இதற்குத் தேவையான இடுபொருள்கள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ளன என்றார்.

**மாவட்டத்தில் 18.20 மி.மீ. மழை பதிவு**

திருப்பூர் மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் கடந்த இரு நாள்களாக பரவலாக மழை பெய்தது.மழைப் பதிவு விவரம் (மி.மீ.): திருப்பூரில் 18.20, பல்லடத்தில் 42, காங்கயத்தில் 8, உடுமலையில் 16, தாராபுரத்தில் 7, மூலனூரில் 9.50, அவிநாசியில் 12, மடத்துக்குளத்தில் 15 மி.மீ. மழைப் பதிவாகியுள்ளது.மாவட்டத்தில் அதிகபட்சமாக பல்லடத்தில் 42 மி.மீ., குறைந்தபட்சமாக தாராபுரத்தில் 7 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் 127.70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரி மழை அளவு 18.20 மி.மீ.

**சூரியகாந்தி விதைகள் ஏலம்**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை 911 மூட்டை சூரியகாந்தி விதைகள் ஏலம் நடைபெற்றது.

இங்கு, வாரந்தோறும் வியாழக்கிழமை சூரியகாந்தி விதைகள் ஏலம் நடைபெறுகிறது. இந்த வாரம் புஞ்சைத்தலையூர், மூத்தாம்பாளையம், வேடசந்தூர், பூலாம்பரப்பு, ஊத்துப்பட்டி, சீத்தப்பட்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து சூரியகாந்தி விதைகளைவிவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர். இதில், ஈரோடு, கரூர், கோபி, காங்கயம், பூனாச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எண்ணெய் மில் உரிமையாளர்கள் ஏலத்தில் பங்கேற்று, கொள்முதல் செய்தனர்.அதிகபட்சமாக கிலோ

ரூ. 37.67-க்கும், குறைந்தபட்சமாக கிலோ ரூ. 31.90-க்கும் சூரியகாந்தி விதை ஏலம் போனது. மழைக் காலமாக இருப்பதால் இதன் விலை சராசரியாக அதிகரித்து வருகிறது

**மழையால் வாரச் சந்தைக்கு மாடுகள் வரத்து குறைந்தது**

ஈரோடு மாவட்டத்தில் இரண்டு நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக மாட்டுச்சந்தைக்கு வியாழக்கிழமை மாடுகள் வரத்து குறைந்து காணப்பட்டது. ஈரோடு, கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் புதன், வியாழக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம். இந்தச் சந்தையில் சுமார் 500 பசுக்கள், 600 எருமைகள், 200 கன்றுக்குட்டிகள் வரை விற்பனை நடக்கும். ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களில் இருந்தும், சேலம், கரூர், நாமக்கல், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் வந்து மாடுகளை வாங்கிச் செல்வார்கள்.

ஈரோடு, திருப்பூர், கோவை, சேலம், நாமக்கல், கரூர், தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பசுக்கள் இச்சந்தைக்கு வாரந்தோறும் விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன.

கோடைக்காலம் தொடங்கிய நிலையில் தீவனப் பற்றாக்குறை காரணமாக மாடுகளை விவசாயிகள் கடந்த ஒருமாதமாக விற்பனை செய்ய ஆர்வம் காட்டியதால் இச்சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்தது. இந்நிலையில், கடந்த சில நாள்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் மாடுகளை விற்பனை செய்ய விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்துவிட்டது. இதனால், இந்த வாரம் சந்தைக்கு மாடுகள் குறைந்த எண்ணிக்கையிலேயே வந்தன. சுமார் 250 மாடுகள் மட்டும் தான் விற்பனைக்கு வந்ததாக மாட்டுச்சந்தை மேலாளர் முருகன் தெரிவித்தார்.

**விவசாயத்தை மாணவர்கள் விரும்பி படிக்க வேண்டும்**

விவசாயத்தை மாணவர்கள் விரும்பி படிக்க வேண்டும் என்று மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வலியுறுத்தினார். பவானி ஆப்பக்கூடல் குமரகுரு வேளாண் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற கல்லூரி தின விழா, விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று அவர் பேசியதாவது:

எவ்வித சமூக அமைப்பிலும் விவசாயத்துக்கான முக்கியத்துவம் குறையாது. கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற அனைத்து அம்சங்களுமே ஒரு நாட்டின் வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் என்ற போதிலும் இந்தியா போன்ற விவசாய நாடுகளில் விவசாய வளர்ச்சி தான் தேசத்தின் உயிரோட்டமான வளர்ச்சியைப் பறைசாற்றும். விவசாயம், கௌரவமும், கண்ணியமும் மிக்க பணி.

எனவே, விவசாயி தனது தொழில் குறித்து பெருமைப்படலாம். பொறியியலைப் போலவே விவசாயப் பட்டப் படிப்புப் படிக்கிற

மாணவர்களும் நான்காண்டுப் படிக்கின்றனர். இந்தக் காலகட்டத்தில் மாணவ, மாணவிகள் பாடப் புத்தகங்களைப் படித்து நல்ல மதிப்பெண்கள் பெற முயற்சிக்கும் அதே நேரத்தில் விவசாயம் சார்ந்த, சமூகம் சார்ந்த பிற புத்தகங்களையும் ஆழ்ந்து வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். விவசாயக்கல்வியை மாணவர்கள் விரும்பி படிக்க வேண்டும்.

கல்லூரியில் படிக்கிற காலம் என்பது அனைவரது வாழ்க்கையிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் காலம். நல்ல நண்பர்களைத் தேர்வுசெய்து, கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டால் அப்பழக்கம் அறிவு வளர்ச்சிக்கு வித்திடுவதாக அமையும். படிப்பதைப் புரிந்து படிக்கிற மாணவர்கள், வெளி அழுத்தத்துக்கு ஆள்படாமல் ஈடுபாட்டுடன் படிக்கும் மாணவர்கள் பெறும் வெற்றி நிரந்தரமானதாகவும் அடுத்தகட்டத்துக்கு இட்டுச்செல்வதாகவும் திகழ்கிறது என்றார் ஸ்டாலின் குணசேகரன். விழாவில், கல்லூரி செயல் அலுவலர் பி.சிவசுப்பிரமணியன், சக்தி சுகர்ஸ் முதன்மைப் பொது மேலாளர் என்.செழியன், கல்லூரி ஆலோசகர் பி.நடராஜன், கோவை சக்தி சர்க்கரை ஆலை முதன்மைப் பொதுமேலாளர் ஜி.முனியசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

**உதகையில் இன்று மலர்க் கண்காட்சி தொடக்கம்**

நீலகிரி கோடை விழாவையொட்டி, உதகையில் 3 நாள் மலர்க் கண்காட்சி வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

அரசினர் தாவரவியல் பூங்காவில் நடைபெறும் இக்கண்காட்சியை, ஆளுநர் ரோசய்யா தொடங்கி வைக்கிறார். வேளாண்மைத் துறை அமைச்சர் வைத்தியலிங்கம் தலைமை வகிக்கிறார்.

இக்கண்காட்சிக்காக சுமார் 21,000 மலர்த் தொட்டிகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், 115 நாடுகளின் தேசிய மலர்களும் உதகைக்கு கொண்டு வரப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பூங்காவின் மேற்புறத்தில், புதிதாக உருவாக்கப்பட்ட நியூ கார்டன் பகுதியில் சுமார் 6,000 மலர்த் தொட்டிகளைக் கொண்டு மலர் பாத்தி உருவாக்கப்பட்டுள்ளது.பூங்காவின் முகப்பில் சுமார் 1 லட்சம் ரோஜா மலர்களைக் கொண்டு பிரமாண்டமான தாஜ்மஹால் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன், மலர்கள் மூலமாக யானை உள்ளிட்ட பல்வேறு வடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**தமிழகத்தில் பலத்த மழை பெய்யும்**

வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகத்தில் அடுத்த சில நாள்களுக்கு பலத்த மழை பெய்யும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குமரிக் கடல் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்பு வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டது. இந்த சுழற்சி தற்போது லட்சத் தீவுகள், கேரள கடற்கரை ஒட்டிய பகுதிகளில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுவையின் பல இடங்களில் அடுத்த ஓரிரு நாள்களுக்கு பலத்த மழை பெய்யும் என்றுவானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: லட்சத் தீவுகள் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழகத்தில் பலத்த மழை பெய்யும். தற்போது மேகங்களின் நிலை தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமாக உள்ளது. கடல் மட்டத்திலும் சாதகமான நிலை ஏற்பட்டால், விரைவில் தென் மேற்கு பருவமழை தொடங்கும் என்று தெரிவித்தனர். இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி இளையாங்குடியில் 120 மி.மீ. மழையும், பொள்ளாச்சியில் 100 மி.மீ. மழையும் பெய்துள்ளது. ராஜபாளையத்தில் 90 மி.மீ. மழையும், குமாரபாளையத்தில் 70 மி.மீ. மழையும் பெய்துள்ளது. பெரியநாயக்கன்பாளையம், ராமேஸ்வரம், ஆண்டிப்பட்டி,

கொடைக்கானல், குன்னூர் 60 மி.மீ., தேவக்கோட்டை, கொல்லிமலை, விராலிமலை, சிவகிரி 50 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூர், வால்பாறை, கடலூர், பாம்பன், விருதுநகர், கோவை, ஏற்காடு, பாளையங்கோட்டை, பவானி, கோத்தகிரி, பாபநாசம் 40 மி.மீ., மேட்டுப்பாளையம், நெய்வேலி, கோவில்பட்டி, மேட்டூர், பரமக்குடி, ஒட்டபிடாரம், ஈரோடு, ஸ்ரீவைகுண்டம், தருமபுரி, தூத்துக்குடி, துறையூர், சேலம், சிதம்பரம் 30 மி.மீ., கன்னியாகுமரி, ஆத்தூர், ஊட்டி, வேதாரணயம், ராமநாதபுரம், திருப்பூர், புதுவை, வாழப்பாடி, நாமக்கல் 20 மி.மீ., நிலக்கோட்டை, நாகப்பட்டினம், அவிநாசி, சீர்காழி, பெரம்பலூர், அறந்தாங்கி, சென்னை, விருதாச்சலம் 10 மி.மீ. மழை பெய்துள்ளது.

**பரவலாக மழை: மக்கள் மகிழ்ச்சி**

புதுச்சேரியில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடந்த 4-ம் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கியது. சில நாள்கள் கடும் வெயில் இருந்தது. இதனால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்கு ஆளாயினர். வெயிலின் தாக்கத்தால் பகல் நேரத்தில் புதுவையில் பெரும்பாலான சாலைகள் ஆள்கள் நடமாட்டமின்றி காணப்பட்டன.இந்நிலையில் வங்கக் கடலில் ஏற்பட்ட வளி மண்டல மேலடுக்கு சுழற்சியால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்து வருகிறது. வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள வளி மண்டல மேலடுக்கு சுழற்சி லட்சத்தீவு அருகே மையம் கொண்டுள்ளது.இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்திற்கு மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி தொடர்ந்து புதுச்சேரியில் சில நாள்களாக மழை பரவலாக பெய்து வருகிறது. இதனால் கத்திரி வெயில் பாதிப்பில் இருந்து தப்பியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மீனவர்களுக்காக கடல்சார் மேம்பாட்டுப் பிரிவு அமைப்பு**

புதுச்சேரியில் மீனவர்கள் நலனுக்காக ஒருங்கிணைந்த கடல்சார் மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்படுகிறது.யூனியன் பிரதேசமான புதுச்சேரியில், புதுவை, காரைக்கால், மாஹே, ஏனாம் உள்ளிட்ட 4 பிராந்தியங்களும் கடலோரத்தையொட்டியே உள்ளன. புதுச்சேரியில் மட்டும் 45 கி.மீ. தூரம் கடலோரப் பகுதி உள்ளது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

18 மீனவ கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்களும் மீன் விற்பனை செய்து வருகின்றனர்.மீன் வளத் துறை சார்பில் மீனவர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் மத்திய அரசின் "ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா'வின் ஒரு பகுதியான தேசிய ஊட்டச்சத்து மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் ஒருங்கிணைந்த கடல்சார் மேம்பாட்டுப் பிரிவு தொடங்கப்படுகிறது.

இதற்கான வழிகாட்டு நெறிகளுக்கு துணைநிலை ஆளுநர் ஏ.கே.சிங் அனுமதி அளித்துள்ளார்.மீன்வளத் துறையில் முதலீடு செய்ய பொதுமக்கள், தொழில் முனைவோர், மீனவர்களை ஊக்குவிப்பது, தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி, நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல், மீன் குஞ்சுகளை வளர்த்து சந்தைக்கு அனுப்புதல், அதிக நீர்ப்பரப்பை மீன் வளர்ப்பின் கீழ் கொண்டு வருதல், மீனவர்களின் வருவாயை அதிகரித்தல், தனியார் தொழில் முனைவோர், தரமான மீன் குஞ்சுகளை வளர்க்க ஊக்குவிப்பு, உற்பத்தியைப் பெருக்கத் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருதல் ஆகியவை இந்த வழிகாட்டு

நெறிமுறைகளாகும்.புதுச்சேரி மீன்வளத் துறை, புதுச்சேரி- காரைக்கால் மீனவர்கள் முன்னேற்ற முகமை, பாண்டிச்சேரி மீனர்கள் கூட்டுறவு விற்பனை இணையம் உள்ளிட்டவை இத்திட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகளாகும்.இதன் கீழ் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கான இடம், 22 ஹெக்டேரில் மீன் குட்டைகள் அமைத்தல், மீன்கள் உற்பத்திக்கான முதலீட்டுத் தொகை, குளிர்பதன வசதி, மீன்கள் விற்குமிடம் ஏற்படுத்துதல் உள்ளிட்டவையாகும்.

மானிய உதவி: மீன் வளர்ப்பு மையம் அமைக்க ரூ.15 லட்சம் வரை மானியம் அளிக்கப்படும் (10 மில்லியன் உற்பத்தி), மீன் குட்டைகள் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ. 5 லட்சம் மானியம் (அதிகபட்சம் 10 ஹெக்டேருக்கு ரூ.50 லட்சம் வரை), இதில் 40 சதவீதம் மத்திய அரசு மானியம், 60 சதவீதம் தொழில்முனைவோர் பங்காகும். மீன்கள் விற்பனை மையம் ஏற்படுத்த ரூ.15 லட்சம் வரை 100 சதவீத மானியம் அளிக்கப்படும்.மீன் உற்பத்திக்கான முதலீட்டுத் தொகை (25 ஹெக்டேர் வரை) ஒரு ஹெக்டேருக்கு ரூ.2 லட்சம் மானியம், அதிகபட்சம் ரூ.20 லட்சம் வரை).

திட்டத்தில் சேர விரும்பும் தொழில் முனைவோர், நபர்கள், இதற்கான விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து, மீன்வர்கள் முன்னேற்ற முகமை ஒப்புதலைப் பெற வேண்டும். கண்காணிப்பு குழுவினர் விண்ணப்பங்களை பரிசீலித்து தகுதி இருப்பவர்களின் மனுக்களை மீன் வளத் துறைக்கு அனுப்புவர். அதன் பின் அங்கிருந்து நிதியுதவியை பெறலாம்.இத்திட்டம் புதுச்சேரியில் மீன்வளத்தை பெருக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை அடவிநயினார் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 12 அடி உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அடவிநயினார் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 12 அடி உயர்ந்து வியாழக்கிழமை 35 அடியாக இருந்தது.திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 36, பாபநாசம் கீழ் அணை 12, சேர்வலாறு அணை 9, மணிமுத்தாறு அணை 8.2, ராமநதி அணை 4, கருப்பாநதி அணை 23, குண்டாறு அணை 4, அடவிநயினார் அணை 24, நம்பியாறு அணை 6, கன்னடியன் அணைக்கட்டு 19.திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் 6, சேரன்மகாதேவி 23, திருநெல்வேலி 33, பாளையங்கோட்டை 37, தென்காசி 4.8, செங்கோட்டை 6, ஆய்க்குடி 3.2, ஆலங்குளம் 1.6, ராதாபுரம் 29, சங்கரன்கோவில் 29, சிவகிரி 45, தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் 5.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 315.51 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 94 கனஅடியும், கடனாநதி அணைக்கு 15 கனஅடியும், ராமநதி அணைக்கு 40 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு விநாடிக்கு 41 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 65 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் உயர்வு: அடவிநயினார் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 12 அடி உயர்ந்து 35 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 42 அடியாகவும் இருந்தது. பிற அணைகளின் நீர்மட்டம்: பாபநாசம் அணை 70 அடி, சேர்வலாறு அணை 83.14 அடி, மணிமுத்தாறு அணை 83 அடி, கடனாநதி அணை 55.90 அடி, கருப்பாநதி அணை 40.03 அடி, குண்டாறு அணை 15.40 அடி, வடக்குப் பச்சையாறு அணை 23 அடி, நம்பியாறு அணை 13.02 அடி, கொடுமுடியாறு அணை 2.50 அடி.

குடிநீர் மற்றும் பாசனத் தேவைக்காக பாபநாசம் அணையிலிருந்து 304.75 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 120 கனஅடியும், கடனாநதி, ராமநதி அணைகளில் இருந்து தலா 10 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

**மீன் வைரஸ் நோய் கண்டறிதல் பயிற்சி முகாம்**

தூத்துக்குடியில் மீன் வைரஸ் நோய் கண்டறிதல் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன் நோயியல் மற்றும் சுகாதாரா மேலாண்மைத் துறையின் மூலம் மீன் வைரஸ் நோய் கண்டறியும் தொழில்நுட்ப முறைகள் என்ற தலைப்பிலான பயிற்சி முகாம் 10 நாள்கள் நடைபெற்றது.

பயிற்சி நிறைவு விழால், முகாமில் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களை கல்லூரி முதல்வர் கோ. சுகுமார் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், மீன் மற்றும் இறால்களுக்கு ஏற்படும் வைரஸ் தாக்கத்தினை கண்டறியும் முறைகளை கற்பிக்கும் இதுபோன்ற குறுகிய கோடைகால பயிற்சியானது மீன் விவசாயிகள் மற்றும் இந்தத் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு மிகவும் அவசியமானதாகும்.

மீன்கள் மற்றும் இறால்கள் வைரஸ் நோய்களால் தாக்கப்படுதல் என்பது இந்திய பொருளாதார முன்னேற்றத்திற்க்கு மிகவும் தடையாகும். இதனை தடுப்பதற்க்கு இந்த பயிற்சி முக்கியத்துவமானது என்றார் அவர்.

நிகழ்ச்சியில், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மு. ரோசலிண்ட் ஜார்ஜ், மீன் நோயியில் மற்றும் சுகாதார மேலாண்மைத் துறை தலைவர் கோ. ரிஜி ஜான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி**

சாத்தான்குளம் வட்டார அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி மற்றும் நிலக்கடலை சாகுபடியில் தெளிப்பு நீர் பாசனத்தில் நீர் நிர்வாகப் பயிற்சி ஆகியன தஞ்சைநகரத்தில் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு வேளாண் துணை இயக்குநர் பி. செல்வராஜ் தலைமை வகித்து பேசினார். வேளாண் உதவி இயக்குநர் யு. பூவண்ணன் வரவேற்றார். பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். இதில், வேளாண் அலுவலர் க.அல்லிராணி, உதவி வேளாண் அலுவலர் பா. சிவராம், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் த. முத்துமாலை, ஐ.முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கி. ராஜலட்சுமி நன்றி கூறினார்.

**சூரியஒளி மின் உற்பத்தி திட்டம்: நாசரேத்தில் தொடக்கம்**

நாசரேத்தில் மானியத்துடன் வீட்டில் சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை நாசரேத் துணை மின் நிலைய மின்வாரிய நிர்வாகப் பொறியாளர் மணியன் தொடங்கிவைத்தார்.வீடுகளில் சூரிய ஒளியில் இருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு தமிழக அரசின் சார்பில் 50 சதவீத மானியத்தொகையுடன் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதையடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் முதன்முதலாக நாசரேத்தில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர் செல்வின் ராஜ்குமார் வீட்டில் சோலார்

மீட்டர் பொருத்தப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் மின்சாரம் வீட்டுத் தேவைக்கும், மீதமுள்ளதை அரசும் எடுத்துக் கொள்கிறது.

இது தானியங்கியாக செயல்பட்டு தேவைகளை பூர்த்தி செய்து கொள்கிறது எனவும், இதற்கு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் செலவு ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு ரூ. 60 ஆயிரம் அரசு சார்பில் மானியமாக வழங்கப்பட உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை நாசரேத் துணை மின்நிலைய மின்வாரிய உதவிப் பொறியாளர் கிரின்வெல் முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர் மணியன் தொடங்கிவைத்தார்.

**குமரியில் தொடர் மழை: கொட்டாரத்தில் 31.8 மி.மீ.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது. அதிகபட்சமாக கொட்டாரத்தில் 31.8 மி.மீ. மழை பதிவானது.

இம்மாவட்டத்தில் அணைப்பகுதிகள் மட்டுமன்றி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. பொய்கை, முக்கடல் அணைகளைத் தவிர ஏனைய அணைகளின் நீர்மட்டம் இன்னும் சில நாள்களில் உச்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டத்தில் புதன்கிழமை இரவு தொடங்கி வியாழக்கிழமை காலை 8 மணிவரை பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): பெருஞ்சாணி 3.6, சிற்றாறு2 6.2, மாம்பழத்துறையாறு 7, கொட்டாரம் 31.8, மயிலாடி 22.2, புத்தன் அணை 4, பூதப்பாண்டி 5.5, நாகர்கோவில் 2 என்ற அளவில் மழை பதிவானது.

தற்போதைய மழையால் பேச்சிப்பாறை அணைக்கு 135 கனஅடி, பெருஞ்சாணி அணைக்கு 74 கனஅடி, சிற்றாறு 1 அணைக்கு 10 கனஅடி, சிற்றாறு 2 அணைக்கு 18 கனஅடி என்ற அளவில் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

**வேகமாக குறைந்து வரும் முக்கடல் அணையின் நீர்மட்டம்**

குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வரும் நிலையில் முக்கடல் அணையின் நீர்மட்டம் குறைந்து வருவது குடிநீர்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் என நாகர்கோவில் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு 1, சிற்றாறு 2, பொய்கை, மாம்பழத்துறையாறு, முக்கடல் உள்ளிட்ட அணைகள் உள்ளன. இதில், குடிநீர் தேவைக்காக கட்டப்பட்ட ஒரே அணை முக்கடல் அணையாகும்.

நாகர்கோவில் நகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே ஆதாரமாக இது விளங்கி வருகிறது. 25 அடி கொள்ளளவு கொண்ட முக்கடல் அணை நாகர்கோவிலில் இருந்து பூதப்பாண்டி செல்லும் சாலையில் இறச்சகுளம் அருகே அமைந்துள்ளது. இந்த அணையில் மழைநீர் அப்படியே சேமிக்கப்படுகிறது. இதனால் இந்த அணையின் தண்ணீர் மிகவும் சுவையுள்ளதாக இருக்கிறது.

நாகர்கோவில் நகராட்சி மட்டுமன்றி பூதப்பாண்டி, துவரங்காடு, விளாங்காடு, ஈசாந்திமங்கலம், இறச்சகுளம், புத்தேரி ஆகிய 6 ஊராட்சிப் பகுதிகளுக்கும் இந்த அணையில் இருந்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மாவட்டம் முழுவதும் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது.

எனினும் முக்கடல் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. இதனால் நாகர்கோவில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப்போதைய நிலவரப்படி 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 34.85 அடியாகவும், 77 அடி கொள்ளளவு கொண்ட பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 64.60 அடியாகவும், தலா 18 அடி கொள்ளளவுகளைக் கொண்ட சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 13.58 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 13.68 அடியாகவும், 55 அடி கொள்ளளவு கொண்ட மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் உச்ச நீர்மட்டத்தையும் எட்டியுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடும்போது, 2010,2014 ஆம் ஆண்டுகளில் பெய்த கனமழையால் முக்கடல் அணையின் நீர்மட்டம் உச்சத்தை எட்டியது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து நாகர்கோவிலைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஸ்ரீராம் கூறியதாவது: முக்கடல் அணையைப் பொருத்தவரை நாகர்கோவில் சுற்றுவட்டாரப் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. இந்த அணையைத் தூர்வார வேண்டுமெனவும், அணைப் பகுதியைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அணையின் உயரத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் நகராட்சி நிர்வாகத்தை பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். ஆனால், எந்தவொரு கோரிக்கையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

உலக்கையருவியில் இருந்து முக்கடல் அணைக்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தையும் செயல்படுத்த வலியுறுத்தி வருகிறோம்.

உலக்கையருவியில் இருந்து துவரங்காடு வரையிலான 6 கி.மீ தொலைவுக்கு புதிதாக பைப்லைன்கள் அமைத்து தண்ணீர் கொண்டு வர வேண்டும். ஏற்கெனவே துவரங்காட்டில் இருந்து முக்கடல் அணை வரையிலான பகுதியில் பைப்லைன் போடப்பட்டுள்ளது. இதனால் இந்தத் திட்டத்தை கொண்டு வருவது மிகவும் எளிதான காரியம்தான்.

உலக்கையருவியில் இருந்து முக்கடல் அணைக்கு தண்ணீர் கொண்டு வரப்படும் திட்டம் நிறைவேறினால் ஆண்டுக்கு 6 முதல் 9 மாதங்கள் வரை குடிநீருக்கு தட்டுப்பாடே வராது. எனவே இதுபோன்ற திட்டங்களை துரிதமாக கொண்டு வர நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**கரூர் மாவட்டத்தில் பரவலாக கோடை மழை: பாலவிடுதியில் அதிகளவாக 46.10 மி.மீ. பதிவு**

கரூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. புதன்கிழமை அதிகபட்சமாக பாலவிடுதியில் 46.10மி.மீ. மழை பதிவானது.

கடந்த 4-ஆம் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கியது. இதையடுத்து, கரூர் மாவட்டத்தில் கடந்த வாரம் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. சாலைகளில் தார்கள் உருகும் அளவிற்கு வெயிலின் உக்கிரம் காணப்பட்டது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கும் நிலை உருவாகியது. கடந்த சில தினங்களாக கரூர் மாவட்டத்தில் ஆங்காங்கே பலத்த மற்றும் லேசான மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை அதிகாலை வரை பெய்த மழையின் அளவு(மி.மீ): பாலவிடுதி - 46.10,கடவூர் - 46,மைலம்பட்டி-45.20,கரூர் - 26,மாயனூர் - 22,தோகைமலை - 20,,அரவக்குறிச்சி - 17.60, க. பரமத்தி - 17.40, குளித்தலை - 10.60 (மி.மீ) மழை பதிவாகியுள்ளது.

**செம்மறியாடுகளை பாதுகாக்க ஆலோசனை**

செம்மறியாடுகளை துள்ளுமாரி நோயில் இருந்து பாதுகாப்பது குறித்து கரூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் ந. அகிலா ஆலோசனை தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொதுவாக மழைக் காலங்களில் "துள்ளுமாரி நோய்' செம்மறியாடுகளை தாக்கும் வாய்ப்புள்ளது.மழைக்காலங்களில் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்கு செல்லும் ஆடுகளுக்கு இந்நோயின் பாதிப்பு அதிகளவில் காணப்படும்.இந்நோயானது,எல்லா வயது ஆடுகளையும் தாக்கும் என்றாலும், இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.

நல்ல திடகாத்திரமான ஆடுகள் கூட இந்நோயினால் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. இந்நோய்க்கிருமிகள் குடலில் தங்கி இருப்பதனால், ஆடுகளுக்கு திடீரென அதிகத் தீவனம் அளிக்கப்படும் போது, இக்கிருமிகள் பெருகி நோயை உண்டாக்கும்.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகள் திடீரென துள்ளிக் குதித்து இறந்து விடும்.

கால்கள் நடக்க முடியாமல் விரிந்து, கழுத்து விரைத்து சிறிது கழிச்சலுடன் உடனடியாக இறந்து விடும்.

இந்நோய்க்கு மழைக்காலம் வரும் முன் தடுப்பூசி போடுதல் மற்றும் மழைக்காலம் முடிந்தவுடன் உள்ள பசுமையான மேய்ச்சல் தரையில் குறைந்த நேரம் மேயவிடுதல் போன்ற முறைகளை கையாளலாம்.

செம்மறியாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி இந்நோய்க்கான தடுப்பூசியினை இட்டு ஆடுகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நன்மை செய்யும் பூச்சிகளை வளர்க்க புதிய திட்டம்**

நன்மை செய்யும் பூச்சிகளை வளர்க்க வேளாண் துறை மூலம் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.இதுகுறித்து, வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தது: விவசாய நிலங்களுக்கு பாம்பு, ஆந்தை, மண்புழு போன்றவை உற்ற நண்பர்கள். ஆனால், இந்த உயிரினங்கள்

அழிந்து வருகின்றன. பாம்பும், ஆந்தையும் இருந்தால் எலிகள் தொல்லை கட்டுப்படுத்தப்படும். ஒரு ஜோடி எலியானது, ஒன்றரை ஆண்டுகளில் 1,200-க்கும் மேற்பட்ட எலிகளை உற்பத்தி செய்துவிடும். எலிகளை மருந்து வைத்து கட்டுப்படுத்தாமல், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், இயற்கையான முறையில் கட்டுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படஉள்ளது.விவசாய நிலங்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் தேவை. இதற்காக விவசாய நிலத்தை சுற்றிலும் பூச்செடிகள் வளர்த்து தேனீ, சிலந்தி, வண்ணத்துப்பூச்சி போன்ற நன்மை செய்யும் பூச்சிகளை வளர்க்கலாம்.

இதன் மூலம், தீமை செய்யும் பூச்சி இனங்களை அழிக்க முடியும். இந்த நன்மை செய்யும் பூச்சி இனங்களை வளர்க்கும் வகையில் புதிய திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது என்றனர்.